
அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2018

## 32 - வணிகக் கல்வி

### புள்ளியிடும் திட்டம்




இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

முழுப்பதிப்புரிமையுடையது

# புள்ளி வழங்கும் திட்டம்

## க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2018

## 32 - வணிகக்கல்வி

### பரீட்சகர்களின் கவனத்திற்கு

விடைத்தாள் மதிப்பீடு தொடர்பான புள்ளி வழங்கும் இத்திட்டமானது பூரணமான விடைகளை உள்ளடக்கியதாகக் கருதப்படமாட்டாது. இதில் தரப்படும் விடயங்கள் புள்ளியிடலுக்கான ஒரு வழிகாட்டியாகவே அமையும் என்பதனை மதிப்பீட்டுப் பணியில் ஈடுபடும் பரீட்சகர்கள் புரிந்து கொள்ளுதல் வேண்டும். எனவே மதிப்பீட்டுப் பணியில் ஈடுபடும் பரீட்சகராகிய நீங்கள் இப்பாடம் தொடர்பில் பூரண அறிவு, கற்றல், கற்பித்தல் மற்றும் தனது அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு பரீட்சார்த்திகள் முன்வைத்துள்ள விடைகளை மிகவும் கவனமாகப் பரிசீலித்துப் புள்ளிகளை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். பரீட்சார்த்திகளின் எதிர்காலம் நீங்கள் வழங்கும் புள்ளிகளிலேயே தங்கியிருப்பதனால் இப்பணி தொடர்பில் நீதியாகவும், நேர்மையாகவும் இரகசியத் தன்மையைப் பேணுபவராகவும் மதிப்பீட்டுப் பணியில் ஈடுபடுவதுடன் ஒருமைப்பாட்டினையும் பேணுவது பரீட்சகர்களாகிய உங்களது கடமையாகும்.

# க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2018

## 32 - வணிகக்கல்வி

வணிகக் கல்விப் பாடத்திட்டத்தின் மூலம் மாணவர்களிடம் எதிர்பார்க்கப்படும் குறிக்கோள்களை மதிப்பிடக்கூடியவாறும் மாணவர்களின் பாடம் தொடர்பான விடயங்கள், அறிவு தர்க்க ரீதியாக ஒப்பிட்டுப் பார்த்து வணிக அனுபவங்களையும், அவை செயற்படும் ஆற்றலையும், வணிக உலகின் போக்குகளையும், செயல்முறை தொடர்பான அறிவு மற்றும் தகவல் தொழிநுட்ப அறிவு போன்றவற்றையும் மிகவும் சிறந்த முறையில் மதிப்பிடுவதற்கு ஏற்ற வகையில் இவ்வினாப்பத்திரத்தில் வினாக்கள் வினவப்பட்டுள்ளன.

| புள்ளிகள் வழங்கப்படுவது தொடர்பான தொகுப்பு | | | |
|---|---|---|---|
| **வினாப் பத்திரம் I** | **50 வினாக்களைக் கொண்டது.** | 50 x 02 புள்ளிகள் வீதம் | **100 புள்ளிகள்** |
| **வினாப் பத்திரம் II** | **பகுதி I, பகுதி II ஆகியவற்றில் இருந்து ஆகக் குறைந்தது 2 வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக 5 வினாக்களுக்கு விடை எழுதப்படல் வேண்டும்.** | | |
| **பகுதி I** | ஒவ்வொரு வினாவும் 5 பகுதிகள் x 04 புள்ளிகள் வீதம் 20 புள்ளிகளைக் கொண்டவையாகும். | | |
| 1ஆம் வினா<br>2ஆம் வினா<br>3ஆம் வினா<br>4ஆம் வினா | இரு வினாக்களைத் தெரிவு செய்தால் (2 வினாக்கள் x 20 புள்ளிகள் வீதம் மொத்தம் 40 புள்ளிகள்) அல்லது மூன்று வினாக்களைத் தெரிவு செய்தால் (3 வினாக்கள் x 20 புள்ளிகள் வீதம் மொத்தம் 60 புள்ளிகள்) வழங்கப்படும். | ∴ மொத்தம் **40 புள்ளிகள்** அல்லது **60 புள்ளிகள்** | |
| **பகுதி II** | ஒவ்வொரு வினாவும் 5 பகுதிகள் x 04 புள்ளிகள் வீதம் 20 புள்ளிகளைக் கொண்டவையாகும். | | |
| 5ஆம் வினா<br>6ஆம் வினா<br>7ஆம் வினா<br>8ஆம் வினா | மூன்று வினாக்களைத் தெரிவு செய்தால் (3 வினாக்கள் x 20 புள்ளிகள் வீதம் மொத்தம் 60 புள்ளிகள்) அல்லது இரு வினாக்களைத் தெரிவு செய்தால் (2 வினாக்கள் x 20 புள்ளிகள் வீதம் மொத்தம் 40 புள்ளிகள்) வழங்கப்படும். | ∴ மொத்தம் **60 புள்ளிகள்** அல்லது **40 புள்ளிகள்** | **100 புள்ளிகள்** |
| **வினாப்பத்திரம் I, வினாப்பத்திரம் II ஆகியவற்றுக்கான மொத்தப் புள்ளிகள்** | | | **200 புள்ளிகள்** |
| **∴ இறுதிப் புள்ளி** | | | **100** |

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் □ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ............................................................ ✓ $\frac{4}{5}$
............................................................
............................................................

(ii) ............................................................ ✓ $\frac{3}{5}$
............................................................
............................................................

(iii) ............................................................ ✓ $\frac{3}{5}$
............................................................
............................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடபட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை O அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

## புள்ளிப்பட்டியல் தயாரித்தல்

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளிப்பட்டியலில் “வினாப்பத்திரம் I” என்ற நிரலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி “வினாப்பத்திரம் II” எனும் நிரலில் வினாப்பத்திரம் II இற்குரிய இறுதிப்புள்ளியை பதிய வேண்டும். 51 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.

○○○

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2018 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2018 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2018

ව්‍යාපාර අධ්‍යයනය I
வணிகக் கல்வி I
Business Studies I

32 T I

09.08.2018 / 0830 - 1030

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள்:**

* எல்லா வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.
* மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில் உமது **சுட்டெண்ணை** தெளிவாக எழுதுக.
* **1** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின்மீது எழுதுக.
* **31** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின்மீது எழுதுக.
* ஒவ்வொரு வினாவுக்கும் **இரண்டு** புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

சுட்டெண் : ................................

**பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்**

| வினாத்தாள் I | |
|---|---|
| வினா இல. | புள்ளிகள் |
| 01 - 30 | |
| 31 - 50 | |
| மொத்தம் | |

| | கையொப்பம் | குறியீட்டு இல. |
|---|---|---|
| 1 வது பரீட்சகர் | | |
| 2 வது பரீட்சகர் | | |
| மேலதிக பிரதம பரீட்சகர் | | |
| பிரதம பரீட்சகர் | | |
| எண்கணிதப் பரிசோதகர் | | |

**1.** மனிதத் தேவைகள் மற்றும் விருப்பங்கள் தொடர்பில் சரியான கூற்று எது?
(1) நபர் ஒருவர் வரையறுக்கப்படாத தேவைகளையும் வரையறுக்கப்பட்ட விருப்பங்களையும் கொண்டுள்ளார்.
(2) வணிகர் ஒருவர் தேவைகளை உருவாக்க முடியும், ஆனால் விருப்பங்களை உருவாக்க முடியாது.
(3) தேவைகள் பொதுவானவையாக காணப்பட்டபோதும் விருப்பங்கள் நபருக்கு நபர் வேறுபடக்கூடும்.
(4) அன்பு, உணவு, பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்பக்கல்வி என்பன தேவைகளுக்கான சில உதாரணங்களாகும்.
(5) விருப்பங்களைத் திருப்தி செய்வதற்காக நபர் ஒருவர் உற்பத்திப்பொருளைத் தெரிவுசெய்தல் தேவை எனப்படும். (......)

**2.** எந்தவொரு நிறுவனத்துடனும் **சம்பந்தப்படாத** ஒரு பொதுவான குணாம்சம்,
(1) வளங்களின் பயன்பாடு
(2) மனிதத் தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்தல்
(3) பொருட்கள், சேவைகளின் விநியோகம்
(4) இலாபம் உழைத்தலை உத்தேசமாகக் கொண்டு இயங்குதல்
(5) அரசாங்கக் கொள்கைகள் மற்றும் பிரமாணங்களைப் பின்பற்றுதல் (......)

**3.** உற்பத்திப்பொருள் வகைப்படுத்தல் பாய்ச்சலையும் அதற்கான உதாரணத்தையும் மிகச்சரியாக எடுத்துக்காட்டும் விளக்கப்படம் எது?
(1) தொட்டுணரக்கூடியவை → பொருட்கள் → குறுங்கால வாழ்வுத்தன்மை கொண்டவை – மோட்டார் வாகனங்கள்
(2) தொட்டுணரக்கூடியவை → பொருட்கள் → நுகர்வோர் சேவை – போக்குவரத்து
(3) தொட்டுணரமுடியாதவை → சேவை → நேர் சேவை – வங்கிகள்
(4) தொட்டுணரமுடியாதவை → பொருட்கள் → பயன்பாட்டு அடிப்படை – தளபாடங்கள்
(5) தொட்டுணரக்கூடியவை → பொருட்கள் → பயன்பாட்டு அடிப்படை – காப்புறுதி (......)

**4.** வணிகச் சூழல்சார் விசைகள், காரணிகள் மற்றும் அவற்றின் செல்வாக்குகளைச் சரியாகக் குறிப்பிடும் கூற்று எது?
(1) வணிகமொன்றின் கணினி இயக்குநர்கள் அகக் காரணியாகக் காணப்படுவதுடன், அவர்களின் திறன்கள் தொடர்பான பற்றாக்குறையானது வணிகத்துக்கு அச்சுறுத்தலாகக் காணப்படுகின்றது.
(2) போட்டியாளர்களின் அதிகரிப்பானது வணிகமொன்றுக்கு அச்சுறுத்தலாகக் காணப்படுவதுடன், அது அண்மித்த வெளிவாரிச் சூழலின் ஒரு விசையாகக் காணப்படுகின்றது.
(3) வெளிநாட்டு நாணயமாற்று வீதம் குறைவடைதலானது ஏற்றுமதியாளர்களுக்கு ஒரு வாய்ப்பாகக் காணப்படுவதுடன், அது அண்மித்த வெளிவாரிச் சூழலின் ஒரு விசையாகக் காணப்படுகின்றது.
(4) நிதி நிறுவனங்கள் பேரண்டச் சூழலின் ஒரு விசையாகக் காணப்படுவதுடன், அவற்றிடையே காணப்படும் கடுமையான போட்டி வணிகங்களுக்கான ஒரு வாய்ப்பாகக் காணப்படுகின்றது.
(5) நிறுவனம்சார் கட்டமைப்புக்குள்ளேயான சரியான தொடர்பாடலானது நிறுவனத்துக்கான பலமாகக் காணப்படுவதுடன், அது அண்மித்த வெளிவாரிச் சூழலின் ஒரு விசையாகக் காணப்படுகின்றது. (......)

5. பின்வருவன நுகர்வோர் பாதுகாப்பினூடாகக் கிடைக்கும் சில அனுகூலங்கள் ஆகும்.
A - கொடுப்பனவுப் பெறுமதிக்குச் சமமாக பொருட்களை நுகரச் செய்ய முடிதல்
B - நுகர்வோர் நம்பிக்கையைப் பெற்றுக்கொள்ள முடிதல்
C - உற்பத்திப்பொருள் மேம்படுத்தல் கிரயத்தைக் குறைத்துக்கொள்ள முடிதல்
D - உற்பத்திப்பொருளின் தரங்களை உறுதிப்படுத்த முடிதல்
E - விற்பனைப் புரள்வை அதிகரித்துக் கொள்ள முடிதல்
F - வியாபார நெறிமுறையற்ற செயல்களுக்கு எதிராகச் செயற்பட முடிதல்
மேலே தரப்பட்டவற்றுள், வணிகர் ஒருவருக்கு மட்டுமான நலன்களை உள்ளடக்கியுள்ள விடை எது?
(1) ABC (2) ADF (3) BCE (4) BCF (5) BDF (……)

6. நிமலி, கமலி ஆகியோர் பங்குடைமை உடன்படிக்கை எதுவுமின்றி பங்குடைமையொன்றை நடாத்தி வருகின்றனர். கடந்த வருடத்தின் போது அவர்கள் தாம் இட்ட மூலதனத்துக்கும் மேலதிகமாக வழங்கிய கடனுக்கும் 5% வட்டியைப் பெற்றுக் கொண்டதுடன் நிமலி தனது சொந்த விருப்பத்தின் அடிப்படையில் மாத்திரம் தனது நண்பி சுமதியை ஒரு பங்காளராக இணைத்துக் கொண்டார். பிரதம நிறைவேற்று அலுவலர் என்ற வகையில் கமலி தான் தற்போது பெற்றுக்கொள்ளும் சம்பளம் போதாதென்ற அடிப்படையில் அதனை அதிகரிக்குமாறு வேண்டுகோள் விடுத்திருந்தார். மேலே தரப்பட்ட சம்பவத்தின் அடிப்படையில் இப்பங்குடைமையால் பங்குடைமைச் சட்டத்தின் எத்தனை நிபந்தனைகள் (சரத்துக்கள்) மீறப்பட்டுள்ளன?
(1) 1 ஆகும். (2) 2 ஆகும். (3) 3 ஆகும். (4) 4 ஆகும். (5) எதுவுமில்லை. (……)

7. உத்தரவாதத்தால் வரையறுத்த கம்பனி ஒன்றின் குணாம்சம் **அல்லாதது** எது?
(1) பொதுமக்களுக்குப் பங்குகளை வழங்குவதில்லை.
(2) ஆகக் குறைந்தது இரண்டு அங்கத்தவர்கள் காணப்படுதல்
(3) பங்கிலாபங்கள் விநியோகிக்கப்படுவதில்லை.
(4) இலாபத்தை உத்தேசமாகக் கொண்டு ஸ்தாபிக்கப்படுதல்
(5) கம்பனியை கலைப்பது தொடர்பாக அகவிதியில் ஒவ்வொரு தனிப்பட்ட அங்கத்தவரினதும் பங்களிப்புக்களைப் பிரகடனப்படுத்துதல் (……)

8. கூட்டுறவுச் சங்கம் ஒன்றைப் பதிவு செய்கின்றபோது கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்குச் சமர்ப்பிக்கத் **தேவையில்லாதது** எது?
(1) இடைக்கால உபவிதிகளின் (constitution) இரண்டு பிரதிகள்
(2) பிரேரிக்கப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளின் சாத்திய அறிக்கை
(3) முன்மொழிவை அங்கீகரித்த வருடாந்த பொதுக்கூட்ட அறிக்கை
(4) சங்கத்தின் இட அமைவை எடுத்துக்காட்டும் வரைபடம்
(5) விண்ணப்பத்தில் கையொப்பமிட்ட அங்கத்தவர்களின் தனிப்பட்ட தகவல்கள் (……)

9. சுசிலா என்பவர் முறைமையான திட்டமிடலிலும் பார்க்க தனது ஆற்றல்கள் மீது நம்பிக்கை கொண்டிருந்ததுடன் மிகவும் சிக்கலான பணியாயினும் அதனை ஆரம்பித்து தொடர்ச்சியாகச் செயற்படுத்தும் ஆற்றலைக் கொண்டவராவார். அவர் வணிக இலக்குகளை அடைந்து கொள்வதற்குப் புதுமையான எண்ணங்களைக் கொண்டுள்ளார்.
மேலே தரப்பட்ட தகவலின்படி சுசிலா என்பவர் கொண்டுள்ள முயற்சியாண்மைத் தேர்ச்சிகளின் எண்ணிக்கை
(1) 1 ஆகும். (2) 2 ஆகும். (3) 3 ஆகும். (4) 4 ஆகும். (5) 5 ஆகும். (……)

10. சிற்றளவு வணிகங்களின் தோல்விக்கான சில காரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.
A - உயர்வான போட்டி
B - கணக்குகள் சரியாகப் பேணப்படுவதில்லை
C - உட்கட்டமைப்பு வசதிகளின் போதாத தன்மை
D - சரியான ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்யாமை
E - புதிய உற்பத்திப்பொருட்கள் மீது குவிமையப்படுத்தாமை
F - கைத்தொழிலில் மாற்றமடைகின்ற உற்பத்தித் தொழில்நுட்பம்
G - வணிக செயற்றிறனை பகுப்பாய்வு செய்யாமை
H - அரசாங்க வரிச் சலுகைகள் குறைவடைதல்
மேலே தரப்பட்டவற்றுள் சிற்றளவு முயற்சியாளரால் கட்டுப்படுத்தக்கூடிய காரணிகளை மட்டும் உள்ளடக்கியுள்ள விடை எது?
(1) ACEH (2) ACFH (3) BCDG (4) BDEF (5) BDEG (……)

**11.** பின்வரும் அட்டவணையில் **X** நிரலானது பணத்தின் வெவ்வேறு வகைகளையும் **Y** நிரலானது அவற்றுடன் தொடர்புடைய சில உதாரணங்களையும் எடுத்துக்காட்டுகின்றது.

| X | Y |
|---|---|
| A. இலத்திரனியல் பணம் | 1. திறைசேரி உண்டியல்கள் |
| B. அண்மித்த பணம் | 2. தங்கம் |
| C. நாணயம் (currency) | 3. கேள்வி வைப்புக்கள் |
| D. வங்கிப் பணம் | 4. நாணயத்தாள்களும் குற்றி நாணயங்களும் |
| E. பண்டப் பணம் | 5. கடன் அட்டைகள் |

பணத்தின் வெவ்வேறு வகைகளையும் உதாரணங்களையும் சரியாக இணைத்துக் காட்டும் தொகுதியைத் தெரிவுசெய்க.

(1) A-1, B-3, C-2, D-4, E-5
(2) A-2, B-4, C-3, D-1, E-5
(3) A-2, B-1, C-4, D-3, E-5
(4) A-5, B-3, C-4, D-1, E-2
(5) A-5, B-1, C-4, D-3, E-2 (……)

**12.** பின்வருவன வணிக வங்கி ஒன்றின் மூலம் கிடைக்கக்கூடிய சில அனுகூலங்களும் வசதிகளும் ஆகும்.

A - வட்டியைப் பெறக்கூடியதாக இருத்தல்
B - காசோலைகளை வைப்புச் செய்யக்கூடியதாக இருத்தல்
C - நிலையான கட்டளைகளின் ஊடாக கொடுப்பனவுகளைச் செய்யக்கூடியதாக இருத்தல்
D - கடன் அட்டைகளைப் பெறக்கூடியதாக இருத்தல்
E - மேலதிகப் பற்று வசதிகளைப் பெறக்கூடியதாக இருத்தல்

மேலே தரப்பட்டவற்றுள், சேமிப்புக் கணக்கை வைத்திருக்கும் வாடிக்கையாளர் ஒருவருக்கு கிடைக்கக்கூடிய அனுகூலங்களும் வசதிகளும் எத்தனை?

(1) 1 ஆகும். (2) 2 ஆகும். (3) 3 ஆகும். (4) 4 ஆகும். (5) 5 ஆகும். (……)

**13.** பாண்டு என்பவர் தனது மோட்டார் வாகனத்துக்கு மூன்றாம் நபர் காப்புறுதி ஒன்றை எடுத்திருந்தார். இருந்தபோதும் இம்மோட்டார் வாகனத்தை அவரது மகன் ஓட்டிச் சென்றபோது வீடு ஒன்றுடன் மோதியதன் காரணமாக வீட்டிற்கும் மோட்டார் வாகனத்துக்கும் சேதம் ஏற்பட்டதுடன் அவரது மகனுக்கும் காயமேற்பட்டது.
மேலே தரப்பட்ட சம்பவத்தின்படி காப்புறுதிக்கான கோரிக்கையை (நட்டஈட்டை) எதற்குப் பெற்றுக்கொள்ள முடியும்?

(1) மோட்டார் வாகனத்துக்கு மாத்திரம்
(2) வீட்டிற்கு மாத்திரம்
(3) மகனுக்கு மாத்திரம்
(4) மோட்டார் வாகனத்துக்கும் வீட்டிற்கும் மாத்திரம்
(5) வீட்டிற்கும் மகனுக்கும் மாத்திரம் (……)

**14.** பிருந்தா என்பவர் சொற்பொழிவாற்ற விருப்பமுடையவர். வழமையாக அவரது சொற்பொழிவுகள் நீண்டதாகக் காணப்படும். அவர் தனது சொற்பொழிவுகளில் மிகவும் சிக்கலான சொற்களைப் பயன்படுத்துவதுடன் சிலவேளைகளில் மக்களை தரக்குறைவாகவும் பேசுவார். இவர் தனது அபிப்பிராயத்தை மிகவும் உறுதியாக வெளியிடுவார். ஆனால் சில தகவல்கள் பிழையானவையாக இருக்கும். ஆயினும் அவரது சொற்பொழிவாற்றும் பாங்கு மிகவும் கவர்ச்சிகரமானதாகும்.
மேலே தரப்பட்ட தகவல்களின்படி, பிருந்தாவினால் பயனுறுதியான தொடர்பாடலின் எத்தனை குணாம்சங்கள் மீறப்பட்டுள்ளது/ன?

(1) 1 ஆகும். (2) 2 ஆகும். (3) 3 ஆகும். (4) 4 ஆகும். (5) 5 ஆகும். (……)

**15.** பின்வரும் அட்டவணையில் **X** நிரலானது இலத்திரனியல் ஊடகங்களினூடாக நிறைவேற்றப்பட்ட சில வணிகச் செயற்பாடுகளையும் **Y** நிரலானது சில இலத்திரனியல் வணிக மாதிரியுருக்களையும் எடுத்துக்காட்டுகின்றது.

| X | Y |
|---|---|
| A - குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் கடவுச்சீட்டுக்களுக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுதல் | 1. B2 C |
| B - **M** கம்பனியானது ஒரு தொகுதி அரிசியை **S** கம்பனிக்கு விற்பனை செய்தல் | 2. C2 C |
| C - பயணச்சீட்டு முகவர் ஒருவர் சாமந்தி என்பவருக்கு விமானப் பயணச் சீட்டுக்களை விற்பனை செய்தல் | 3. B2 G |
| D - வரையறுத்த **A** கம்பனியானது அரச கூட்டுத்தாபனம் ஒன்றுக்குக் கணினிகளை வழங்குதல் | 4. G2 C |
| E - **R** என்பவர் தனது சொந்த நிலத்தை **D** என்பவருக்கு விற்பனை செய்தல் | 5. B2 B |

இலத்திரனியல் வணிகச் செயற்பாடுகளையும் இலத்திரனியல் வணிக மாதிரியுருக்களையும் சரியாக இணைத்துக் காட்டும் தொகுதியைத் தெரிவுசெய்க.

(1) A-1, B-3, C-2, D-4, E-5
(2) A-2, B-4, C-3, D-1, E-5
(3) A-3, B-5, C-1, D-4, E-2
(4) A-4, B-5, C-1, D-3, E-2
(5) A-5, B-4, C-1, D-2, E-3

(......)

**16.** முகாமைத்துவம் மற்றும் முகாமைத்துவச் செயன்முறைக் கருமங்களுடன் (functions) தொடர்புடைய மிகவும் சரியான கூற்றைத் தெரிவுசெய்க.

(1) பிரச்சினை ஒன்றுக்கு விசேடமான தீர்வை அமுல்படுத்துகின்ற செயன்முறை முகாமைத்துவம் ஆகும்.
(2) நிறுவனம் சார்ந்த இலக்குகளையும் நோக்கங்களையும் அடைந்து கொள்வதற்கான படிமுறைகளை அமுல்படுத்துவதற்கான செயன்முறை திட்டமிடலாகும்.
(3) நிறுவனம் சார்ந்த இலக்குகளையும் நோக்கங்களையும் அடைந்து கொள்வதற்காக வளங்களை ஒதுக்கீடு செய்யும் செயன்முறை ஒழுங்குபடுத்தல் ஆகும்.
(4) நிறுவனம் சார்ந்த இலக்குகளையும் நோக்கங்களையும் அடைந்து கொள்வதற்காக ஊழியர்கள் மீது செல்வாக்குச் செலுத்தும் செயன்முறை தலைமை வகித்தல் ஆகும்.
(5) நிறுவனம் சார்ந்த இலக்குகளையும் நோக்கங்களையும் அடைந்து கொள்ளும் விதத்தில், திட்டத்துக்கும் உண்மையான பெறுபேற்றுக்கும் இடையேயான வேறுபாடுகளைத் திருத்துகின்ற செயன்முறை கட்டுப்படுத்தல் ஆகும்.

(......)

**17.** பின்வரும் அட்டவணையில் **X** நிரலானது தீர்மானம் எடுத்தலின் படிமுறைகளையும் **Y** நிரலானது குறித்தவொரு நிறுவனத்துடன் இணைந்த விதத்தில் அப்படிமுறைகளுடன் தொடர்புடைய தகவல்களையும் எடுத்துக்காட்டுகின்றது.

| X | Y |
|---|---|
| A. பிரச்சினையை இனங்காணுதல் | 1. சேவை மேம்படுத்தல் பிரிவொன்றை ஸ்தாபித்தல் |
| B. மாற்றுத் தீர்வுகளை இனங்காணுதல் | 2. விற்பனைக்குப் பிந்திய சேவையை மேம்படுத்துதல் |
| C. மாற்றுத் தீர்வுகளை மதிப்பிடுதல் | 3. பல்வேறு தரப்பினர்களிடமிருந்தும் ஆலோசனைகளைக் கோருதல் |
| D. சிறந்த மாற்றுத் தீர்வைத் தெரிவுசெய்தல் | 4. நுகர்வோர் விருப்பங்களைத் திருப்தி செய்ய முடியாமல் இருத்தல் |
| E. தீர்மானத்தை அமுல்படுத்துதல் | 5. பெற்றுக்கொள்ளப்பட்ட ஆலோசனைகளை முகாமைத்துவச் செயற்குழுவில் பகுப்பாய்தல் |

தீர்மானமெடுத்தல் படிமுறைகளையும் அவற்றுடன் இணைந்த தகவல்களையும் சரியாக இணைத்துக் காட்டும் விடையைத் தெரிவுசெய்க.

(1) A-1, B-2, C-4, D-3, E-5
(2) A-2, B-1, C-3, D-5, E-4
(3) A-4, B-3, C-5, D-2, E-1
(4) A-4, B-2, C-3, D-1, E-5
(5) A-5, B-1, C-4, D-3, E-2

(......)

**18.** ஒரு நிறுவனத்தில் இருந்து வெளியேறிய முகாமையாளர் ஒருவரால் நேர்காணல் ஒன்றின்போது முன்வைக்கப்பட்ட கருத்துக்களின்படி அவர் நிறுவனத்தின் பதவியில் இருந்து வெளியேறியதற்கு, போதியளவான சம்பளமின்மை, கூடுதல் எண்ணிக்கையான ஊழியர்களை மேற்பார்வை செய்ய வேண்டியிருந்தமை, ஒரே நேரத்தில் பல்வேறு தரப்பினர்களிடமிருந்தும் கட்டளைகளைப் பெற வேண்டியிருந்தமை, தீர்மானமெடுப்பதில் போதியளவான சுதந்திரமின்மை, பலமான முறைசாராத் தொடர்புகளினால் முறைசார்ந்த அதிகாரம் சிதறுதல் போன்ற மன அழுத்தங்களே இதற்குப் பிரதான காரணங்களாகும் என எடுத்துக் கூறினார்.

மேலே தரப்பட்ட கூற்றின்படி, இந் நிறுவனத்தை ஒழுங்கமைத்தலுடன் தொடர்புடைய பலவீனங்கள் எத்தனை?

(1) 1 ஆகும். (2) 2 ஆகும். (3) 3 ஆகும். (4) 4 ஆகும். (5) 5 ஆகும். (……)

**19.** 'செயன்முறைத் தள அமைப்பை' சரியாக விபரிக்கும் கூற்றைத் தெரிவுசெய்க.

(1) ஒத்த தன்மை கொண்ட தொழிற்பாடுகள் அல்லது செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட தள அமைப்பு

(2) உற்பத்தித் தொழிற்பாடுகளின் வரிசையான பாய்ச்சலை அடிப்படையாகக் கொண்ட தள அமைப்பு

(3) பகுதியளவில் நெகிழ்ச்சியான பாய்ச்சலையும் பகுதியளவில் வரிசையான பாய்ச்சலையும் அடிப்படையாகக் கொண்ட தள அமைப்பு

(4) ஒத்த தன்மை கொண்ட மற்றும் வித்தியாசமான தன்மை கொண்ட இயந்திரங்கள் தனித்தனியாக வித்தியாசமான கலங்களில் இருக்கத்தக்கதாக உருவாக்கப்பட்ட தள அமைப்பு

(5) உற்பத்தி நடைபெறுகின்ற ஒரு நிலையான இடத்தில் சகல உபகரணங்களும் ஏனைய துணைக் கூறுகளும் இருக்கத் தக்கதாக உருவாக்கப்பட்ட தள அமைப்பு. (……)

**20.** பின்வருவன சரக்குகள் தொடர்பிலான சில செலவுகள் ஆகும்.

A - களஞ்சியச் செலவுகள்
B - சரக்கிற்கு ஏற்பட்ட சேதங்கள்
C - காப்புறுதிக் கட்டணங்கள்
D - உட்காவுகைச் செலவுகள்
E - பரிசோதனைச் செலவுகள்
F - பாதுகாப்புச் செலவுகள்
G - கொள்வனவுக் கிரயங்கள்
H - சரக்கிருப்பற்ற நிலையிலான கிரயங்கள்

மேலே தரப்பட்டவற்றுள் சரக்குப் பேணுதற் கிரயத்துடன் மட்டும் சம்பந்தப்பட்ட செலவுகளை உள்ளடக்கிய விடை எது?

(1) ABCF (2) ABCH (3) BCDE (4) BCFH (5) CDEG (……)

**21.** பின்வருவன, உற்பத்தித்திறனை அதிகரிக்கச் செய்வதற்கான முறைகளாக பின்பற்ற முடியுமென முகாமையாளர்களால் கருதப்படுகின்ற சில எண்ணங்கள் ஆகும்.

A - புதிய தொழில்நுட்பப் பயன்பாடு
B - பங்குபற்றுதலுடனான தீர்மானம் எடுத்தலை அறிமுகப்படுத்துதல்
C - ஊழியக் குறைப்பு
D - வள விரயத்தைக் குறைத்தல்
E - உற்பத்திப்பொருள் வேறுபடுத்தல்
F - ஊழியர் நலன்புரிச் செலவுகளைக் குறைத்தல்
G - உற்பத்திப்பொருட்களின் இலாப எல்லையை அதிகரித்தல்

மேலே தரப்பட்டவற்றுள் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்குப் **பொருத்தமற்ற** முறைகள் எவை?

(1) ABC (2) CDE (3) CFG (4) DEF (5) DFG (……)

**22.** ஆயுள்வேத பற்பசையைத் தயாரிப்பவரொருவரின் கருத்துப்படி அவரது உற்பத்திபொருட்கள் இயற்கை வர்ணம், சுவை, தோற்றம் என்பவற்றுடன் உயர்வான தரத்தையும் கொண்டிருக்க வேண்டும். இக்கருத்திற்கு மிகவும் பொருந்தக்கூடிய சந்தைப்படுத்தல் எண்ணக்கரு எது?

(1) உற்பத்தி எண்ணக்கருவாகும்.
(2) உற்பத்திப்பொருள் எண்ணக்கருவாகும்.
(3) விற்பனை எண்ணக்கருவாகும்.
(4) சந்தைப்படுத்தல் எண்ணக்கருவாகும்.
(5) முழுமைப்படைப்பு சந்தைப்படுத்தல் எண்ணக்கருவாகும். (……)

**23.** பின்வருவன சில கணக்கீட்டு விகிதங்களைக் கணிப்பீடு செய்யும் முறைகள் ஆகும்.

A - முதலீட்டின் மீதான திரும்பல் வீதம் $= \dfrac{\text{வரிக்குப் பிந்திய தேறிய இலாபங்கள்} + \text{வட்டி}}{\text{நிலையான சொத்துக்கள்}} \times 100$

B - உரிமை மூலதனத்தின் மீதான திரும்பல் வீதம்

$= \dfrac{\text{வரிக்குப் பிந்திய தேறிய இலாபம்} + \text{முன்னுரிமைப் பங்குகள் மீதான பங்கிலாபம்}}{\text{உரிமை மூலதனம்}} \times 100$

C - மொத்தச் சொத்துக்கள் புரள்வு வீதம் $= \dfrac{\text{விற்பனைகள்}}{\text{மொத்தச் சொத்துக்கள்}}$

D - கடன்பட்டோர் புரள்வு வீதம் $= \dfrac{\text{விற்பனைகள்}}{\text{சராசரிக் கடன்பட்டோர்}}$

E - நடைமுறை விகிதம் $= \dfrac{\text{நடைமுறைச் சொத்துக்கள்}}{\text{நடைமுறைப் பொறுப்புக்கள்}}$

மேலே தரப்பட்டவற்றுள் சரியான விகிதங்களின் எண்ணிக்கை

(1) 1 ஆகும். (2) 2 ஆகும். (3) 3 ஆகும். (4) 4 ஆகும். (5) 5 ஆகும். (......)

**24.** பின்வரும் அட்டவணையில் **X** நிரலானது கொழும்பு பிணைகள் பரிமாற்று நிலையத்தில் விற்பனை செய்யப்படும் பிணைகளின் சில வகைகளையும் **Y** நிரலானது அவற்றுக்குக் கிடைக்கக்கூடிய அனுகூலங்களையும் எடுத்துக்காட்டுகின்றது.

| X | Y |
|---|---|
| A. சாதாரண பங்குகள் | 1. மூலதன ஆதாயத்தை உழைக்க முடிதல் |
| B. முன்னுரிமைப் பங்குகள் | 2. நிலையான வட்டி வீதத்தைப் பெறுவதற்கான உரித்து |
| C. பங்கு ஆணைப்பத்திரங்கள் | 3. கம்பனி உரிமையாளராவதற்கான உரித்து |
| D. கூட்டிணைக்கப்பட்ட தொகுதிக்கடன்கள் | 4. முதலீட்டுக்குக் கூடுதலான பாதுகாப்பு காணப்படுதல் |
| E. அரச கடன் பிணை | 5. நிலையான இலாப விகிதாசாரத்தைப் பெறமுடிதல் |

பிணைகளையும் அவற்றுக்கான அனுகூலங்களையும் சரியாக இணைத்துக் காட்டும் விடையைத் தெரிவுசெய்க.

(1) A-1, B-3, C-2, D-4, E-5
(2) A-3, B-2, C-1, D-5, E-4
(3) A-3, B-5, C-1, D-2, E-4
(4) A-2, B-3, C-1, D-5, E-4
(5) A-4, B-5, C-2, D-1, E-3 (......)

**25.** மனித வள முகாமைத்துவம் தொடர்பில் மிகவும் சரியான கூற்றைத் தெரிவுசெய்க.

(1) குறித்தவொரு நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக நிறுவனமொன்றின் வேலைகளை அலகுகளாகப் பிரிக்கும் தொழிற்பிரிப்பு வேலை வடிவமைப்பாகும்.
(2) வேலையொன்றின் குணாம்சங்கள் தொடர்பான முறையான கற்றல் வேலைப் பகுப்பாய்வு ஆகும்.
(3) ஊழியர் ஒருவரின் தகுதிகளை விபரிக்கின்ற கூற்று வேலை விவரணம் ஆகும்.
(4) குறித்தவொரு வேலையில் காணப்படுகின்ற குணாம்சங்களை விபரிக்கின்ற கூற்று வேலை குறித்துரைத்தல் ஆகும்.
(5) வேலை குறித்துரைத்தல், வேலை விவரணம் ஆகியவற்றைத் தயாரிப்பதற்கு அடிப்படையாக அமைவது வேலைப்பகுப்பாய்வு ஆகும். (......)

**26.** ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்யும் முறைகளில் காணப்படும் சில அனுகூலங்களும் பிரதிகூலங்களும் கீழே தரப்படுகின்றன.

A - ஊழியர்களை ஊக்கப்படுத்த முடிதல்
B - ஊழியர்களை இலகுவாக தக்கவைக்க முடிதல்
C - ஆட்சேர்ப்புக் கிரயத்தைக் குறைக்க முடிதல்
D - நிறுவனத்துக்கு புதிய அறிவைப் பெறக்கூடியதாக இருத்தல்
E - ஊழியர்களிடையே போட்டியை உருவாக்க முடிதல்
F - அதிக எண்ணிக்கையான விண்ணப்பங்களைப் பெறக்கூடியதாக இருத்தல்
G - ஊழியர் அர்ப்பணிப்பை அதிகரிக்க முடிதல்
H - ஊழியர் திசைமுகப்படுத்தல் செலவுகள் அதிகரித்தல்

மேலே தரப்பட்டவற்றிலிருந்து உள்ளக ஆட்சேர்ப்பின் மூலம் பெறக்கூடிய அனுகூலங்களை மாத்திரம் உள்ளடக்கிய விடையைத் தெரிவுசெய்க.

(1) ABCG (2) ACDG (3) BCGH (4) CEFG (5) DEFH (......)

**27.** விமான ஓட்டியாகப் பயிற்சி பெறும் ஒருவருக்கு செய்முறைப் பயிற்சியை வழங்குவதற்கு மிகப் பொருத்தமான பயிற்சியளித்தல் (practical training) முறை
(1) விரிவுரைகளும் கலந்துரையாடல்களும் (2) மாதிரி உருவைப் பயன்படுத்தி (உருப்போலி) பயிற்சியளித்தல்
(3) உள்ளகப் பயிற்சி (4) பாத்திரமேற்று நடித்தல் (Role play)
(5) பயிலுனர் பயிற்சியளித்தல் (……)

**28.** பின்வரும் அட்டவணையில் X நிரலானது தகவல் முறைமையின் கூறுகளையும் Y நிரலானது அவற்றுக்கான உதாரணங்களையும் எடுத்துக்காட்டுகிறது.

| X | Y |
|---|---|
| A. வன்பாகம் | 1. ஊழியர் சேமலாப நிதியக் கோவை |
| B. மென்பாகம் | 2. கணினி இயக்குநர் |
| C. உயிர்ப்பாகம் | 3. செயற்பாட்டு முறைமை |
| D. தரவு | 4. அதிகாரமளிக்கப்பட்ட தரவை மட்டும் உட்செலுத்துதல் |
| E. நடைமுறைகள் | 5. விசைப் பலகை (keyboard) |

தகவல் முறைமைக்கான கூறுகளையும் அவற்றுக்கான உதாரணங்களையும் சரியாக இணைத்துக் காட்டும் விடையைத் தெரிவுசெய்க.
(1) A-1, B-3, C-2, D-4, E-5 (2) A-2, B-4, C-5, D-3, E-1
(3) A-3, B-1, C-4, D-2, E-5 (4) A-5, B-3, C-1, D-4, E-2
(5) A-5, B-3, C-2, D-1, E-4 (……)

**29.** இலத்திரனியல் (Electonic) தொழில்நுட்ப உதவியுடனான வணிகத்துடன் தொடர்புடைய சரியான கூற்று எது?
(1) இலத்திரனியல் வணிகம், இலத்திரனியல் வர்த்தகத்தின் ஒரு உப தொகுதியாகும்.
(2) இலத்திரனியல் வர்த்தகமும் இலத்திரனியல் சந்தைப்படுத்தலும் ஒரே விதமானவையாகும்.
(3) இலத்திரனியல் வணிகத்துக்கும் இலத்திரனியல் வர்த்தகத்துக்குமிடையில் தொடர்பு எதுவுமில்லை.
(4) இலத்திரனியல் வர்த்தகமும் இலத்திரனியல் வணிகமும் ஒரே விதமானவையாகும்.
(5) இலத்திரனியல் வர்த்தகம், இலத்திரனியல் சந்தைப்படுத்தல் என்பன இலத்திரனியல் வணிகத்தின் உப தொடையாகும். (……)

**30.** வணிகத் திட்டத்தின் கூறொன்றைச் சரியாக விபரிக்கின்ற கூற்றைத் தெரிவுசெய்க
(1) போட்டிசார் மற்றும் சந்தை உட்புகுதல் தந்திரோபாயங்கள் உற்பத்தித் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும்.
(2) வளத் தேவைப்பாடு மற்றும் உற்பத்திப்பொருள் நியமங்கள் செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும்.
(3) மனித வளத் தேவைப்பாடுகள் நிதித் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும்.
(4) மதிப்பிடப்பட்ட சகல தகவல்களும் சந்தைப்படுத்தல் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும்.
(5) வணிகத் தந்திரோபாயங்களும் நிறுவனம்சார் கட்டமைப்பும் மனித வளத் திட்டத்தில் விபரிக்கப்பட்டிருக்கும். (……)

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස. (උ.පෙළ) විභාගය/ க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2018

විෂය අංකය / பாட இலக்கம் **32**    විෂයය / பாடம் **வணிகக் கல்வி**

## ලකුණු දීමේ පටිපාටිය/புள்ளி வழங்கும் திட்டம்

### I පත්‍රය/பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|
| 01. | 3 | 11. | 5 | 21. | 3 |
| 02. | 4 | 12. | 3 | 22. | 2 |
| 03. | 1/3 | 13. | 2 | 23. | 2 |
| 04. | 2 | 14. | 4 | 24. | 3 |
| 05. | 3 | 15. | 4 | 25. | 5 |
| 06. | 3 | 16. | 5 | 26. | 1 |
| 07. | 4 | 17. | 3 | 27. | 2 |
| 08. | 5 | 18. | 4 | 28. | 5 |
| 09. | 4 | 19. | 1 | 29. | 5 |
| 10. | 5 | 20. | 1 | 30. | 2 |

◎ විශේෂ උපදෙස්/ விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට/ ஒரு சரியான விடைக்கு 02 ලකුණු බැගින්/ புள்ளி வீதம்

මුළු ලකුණු/மொத்தப் புள்ளிகள் 2 × 30 = 60

**31.** (அ) வேலைப் பிரிப்பின் பெறுபேறு தனிப்பட்டவர்களின் .................................. ஐயும் மேலதிக உற்பத்திப்பொருட்களின் பரிமாற்றம் ...................... ஐயும் உருவாக்குகின்றது.

(ஆ) உடைமையாளர்களின் விழுமியங்கள் மற்றும் நம்பிக்கைகள் நிறுவன ............................ கட்டியெழுப்புவதாகவும் அதன் பொருத்தமற்ற தன்மை நிறுவனத்துக்கு ஒரு ...................... ஆகவும் காணப்படுகின்றது.

**அ. சிறப்புத் தேர்ச்சி, வியாபாரம்**

**ஆ. கலாசாரத்தை, பலவீனம்**

**32.** (அ) வணிக நிறுவனங்கள் நிலைபேறான அபிவிருத்தியின் மீது அக்கறை கொள்ள வேண்டியதன் அடிப்படையில் இலாபத்தின் மீதும் ............................ மற்றும் ............................மீதும் கவனம் செலுத்துதல் வேண்டும்.

(ஆ) உற்பத்தி தொடக்கம் விநியோகம் செய்தல் வரையிலான ஒவ்வொரு படிமுறையினதும் அதிகரித்துச் செல்லும் பெறுமதியின் அடிப்படையில் அறவிடப்படும் வரி............................ ஆகவும் ஊழியர்களின் இலாபங்கள் மீது அறவிடப்படும் வரி ............................ ஆகவும் காணப்படும்.

**அ. மக்கள் / (People) / சமூகம்**
**கோள்கள் / Planet / சூழல்**

**ஆ. VAT / பெறுமதி சேர் வரி**
**PAYE / உழைக்கும் போது செலுத்தும் வரி**

**33.** (அ) தனியுடைமையாளர் தனிப்பட்ட வகையில் .................................. கொண்டிருப்பதுடன் வணிகத்தின் ................................ அடிப்படையில் வரி செலுத்துபவராகவும் காணப்படுகின்றார்.

(ஆ) நிறுவன வணிக நடவடிக்கைகளில் பங்குபற்றுவதற்கான .......................... பங்காளர்கள் கொண்டுள்ள அதேசமயம் அவர்கள் ஆர்வத்துடன் வணிக நடவடிக்கைகளில் பங்குபற்றுவதற்கான .......................... கொண்டுள்ளார்கள்.

**அ. இடரை**
**வருமானத்தின்**

**ஆ. உரிமையை**
**பொறுப்பு / கடப்பாடு / கடமை**

**34.** (அ) இடர்களைத் தாங்கிக்கொண்டு ...................................... உருவாக்கும் நபர் முயற்சியாளர் எனப்படுவதுடன் அவர் எப்பொழுதும் .................................. ஆகக் காணப்படமாட்டார்.

(ஆ) உரிமம் பெற்ற வணிக வங்கிகள் பணத்தை ............................ முடியும். ஆனால் பணத்தை ................................ முடியாது.

**அ. புத்தாக்கத்தை**
**வணிகராக / முகாமையாளராக**

**ஆ. உருவாக்க / கடனாக்கம் செய்ய**
**வெளியிட**

**35.** (அ) காப்புறுதி ஒப்பந்தமொன்றின் செயற்பாட்டினூடாக உருவாகும் வெளிவாரித் தரப்பினர் ............................ தரப்பினர் எனப்படுவதுடன் கடமை நேரத்தின் போது விபத்துக்குள்ளாகும் ஊழியர்களுக்கு நட்டஈட்டை வழங்குவதற்காக தொழில் தருநரால் எடுக்கப்படும் காப்புறுதி .......................... ஆகும்.

(ஆ) போக்குவரத்து முறைமையின் மூலக்கூறுகளில் துறைமுகமானது ................................... என்ற மூலக்கூறுக்கும் புகையிரதத் தண்டவாளமானது ............................... என்ற மூலக்கூறுக்கும் உரித்தானதாகும்.

**அ. மூன்றாம்**

**ஊழியர் பொறுப்புக் காப்புறுதி / ஊழியர்**

**ஆ. தரிப்பிடம் / முனையம்**

**பாதை /வழி**

**36.** (அ) எண்ணத்தை குறித்தவொரு செய்தியாக மாற்றும் செயன்முறை ........................................ என அழைக்கப்படுவதுடன் பெறுபவரால் அச்செய்தியின் கருத்தை மாற்றுகின்ற செயன்முறை ....................................... என அழைக்கப்படும்.

(ஆ) நிதித் திட்டமிடல் மற்றும் கட்டுப்பாட்டின்போது ......................................... பாதீடும் ............................. பாதீடும் பயன்படுத்தப்படுகிறது.

**அ. குறிமுறையாக்கல்**

**குறிமுறை நீக்கல்**

**ஆ. காசு**

**மூலதன**

**37.** (அ) முகாமைத்துவம் என்பது, மாற்றமுறும் வணிகச் ............................ நிறுவனத்தின் நோக்கங்களைப் பயனுறுதியாகவும் வினைத்திறனாகவும் நிறைவேற்றிக் கொள்வதற்கு நிறுவனம்சார்.................... பயன்படுத்துதல் ஆகும்.

(ஆ) அதிகாரமானது .......................... இன் அடிப்படையில் சட்டபூர்வமான வலுவாகக் காணப்படும் அதேவேளை நிபுணத்துவ வலுவானது ................. இன் அடிப்படையில் கிடைப்பதாகும்.

**அ. சூழலில்**

**வளங்களை**

**ஆ. பதவி**

**தனிநபர் / நபர்**

**38.** (அ) ஆகக் குறைந்த சரக்கிருப்பு மட்டம் = ................. மட்டம் – (சராசரி சரக்கிருப்பு பயன்பாடு × சராசரி ........................................)

(ஆ) கொடுப்பனவின் மூலம் பொருட்கள் சேவைகளுக்காக மேற்கொள்ளப்படும் ஒரு ஆள் சாரா மேம்படுத்தல் முறை ............................ ஆகவும் இலக்கு வாடிக்கையாளர்களைத் தூண்டுவதற்காகச் செய்யப்படும் குறுங்கால ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள் ............................. ஆகவும் காணப்படும்.

**அ. மறுகட்டளை**

**கட்டளை காலம்**

**ஆ. விளம்பரப்படுத்தல்**

**விற்பனைமேம்படுத்தல் / வாடிக்கையாளர் விற்பனை மேம்படுத்தல்.**

**39.** (அ) தரவுகளை அவற்றின் பண்புகளின் அடிப்படையில் பாகுபடுத்துவது ...................... உம் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அத் தரவுகளைச் சுருக்கமாகச் சமர்ப்பிப்பது ................................ உம் ஆகும்.

(ஆ) திட்டங்களைத் தயாரிக்கும்போது, விற்பனைத் தொகையை மதிப்பிடல் ................................ எதிர்வு கூறலில் உள்ளடக்கப்படுவதுடன் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் தேவைப்பாடு ................................ திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

**அ. வகைப்படுத்தல்**

**சாராம்சம் / பொழிப்பாக்கம்**

**ஆ. விற்பனை**

**செயற்பாட்டு**

**40.** பின்வரும் கூற்றுக்கள் தொடர்பில் **சரி பிழை** கூறுக.

| | | சரி/பிழை |
|---|---|---|
| 1. | தற்போதைய சாதாரண பங்குதாரரிடம் இருந்து பணத்தை அறவிடுவதன் மூலம் பங்குகளை வழங்குவது உபகாரப் பங்கு வழங்கல் எனப்படும். | ........................... |
| 2. | இலவசமாகப் பங்குகளை வழங்குவது உரிமை வழங்கல் எனப்படும். | ........................... |
| 3. | தமது ஊழிய உரிமைகளைப் பாதுகாப்பதற்காக தொழிற்சங்கங்கள் முகாமையுடன் மேற்கொள்ளும் சமரசப் பேச்சுவார்த்தை கூட்டுப் பேரம்பேசல் ஆகும். | ........................... |
| 4. | கைத்தொழில் பிணக்கொன்று தொடர்பில் தொழில் தருநர் மற்றும் தொழில் பெறுநர் ஆகியோருக்கிடையிலான கூட்டுப் பேரம்பேசல் செயன்முறையின் பின்னரான சமரசம் கூட்டு உடன்படிக்கை எனப்படும். | ........................... |

2. **பிழை**
3. **சரி**
4. **சரி**

**41.** வசதிப் பண்டங்களின் **நான்கு** பண்புகள் தருக.

1. **சந்தையில் பொதுவாக கொள்வனவு செய்யக் கூடியதாக இருத்தல்**
2. **குறைந்த இலாப எல்லை / குறைந்த விலை**
3. **விற்பனை அதிகரிக்க கவர்ச்சிகரமான விளம்பரம் காணப்படுதல் / விற்பனை மேம்படுத்தல்**
4. **குறைந்த ஆயுள்காலம்**
5. **குறுங்கால பாவனைக்கான கொள்வனவு**
6. **தீர்மானம் எடுத்தல் இலகு**
7. **அடிக்கடி தொடர்ச்சியாகக் கொள்வனவைச் செய்தல்**
8. **மாற்றீடுகள் காணப்படல்**
9. **கொள்வனவு செய்தல் இலகு**
10. **பழக்கத்தின் அடிப்படையில் கொள்வனவு செய்தல் / எதுவித முன்னாயத்தமுமின்றிக் கொள்வனவு செய்தல்.**
11. **குறைந்தளவான கொள்வனவு இடர் காணப்படுதல்.**

**42.** அக்கறையுடைய தரப்பினராக அரசாங்கமானது, பாடசாலைகளின் மீது அக்கறை செலுத்துவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் நான்கை எழுதுக.

1. தரமான கல்வியை உறுதி செய்ய
2. மாணவருக்கு கல்வி உரிமையை நிலை நாட்ட
3. பாடசாலையில் ஒழுக்கத்தை நிலை நாட்ட
4. சமூக அபிவிருத்தியை ஏற்படுத்த
5. கல்வி நியமத்தைப் பாதுகாக்க.
6. கல்விசார், கல்வி சாரா உரிமையை உறுதிப் படுத்த
7. கல்வி நிர்வாகத்திலும் கல்வி வள அபிவிருத்தியிலும் வினைத்திறனை ஏற்படுத்த
8. கல்வி நிர்வாகத்தின் வினைத்திறனை உறுதிப்படுத்தவும் வளப்பயன்பாட்டை வினைத்திறனாக மேற்கொள்வும்
9. மாணவர்களது உடல், உள விருத்தியை நிலைநாட்ட

**43.** நுகர்வோரின் பொறுப்புக்கள் நான்கு தருக.

1. நுகர்வு பற்றிய விழிப்புணர்வு
2. செயற்பாட்டு ரீதியான பங்களிப்பு
3. சமூகம்பற்றிய அக்கறை
4. சூழல் பற்றிய விழிப்புணர்வு
5. ஏனையோருடன் இணைந்து செயற்படல் / ஒற்றுமை

**44.** இலத்திரனியல் கொடுப்பனவுகளை இலகுவாக மேற்கொள்வதற்குக் கிடைக்கக்கூடிய நான்கு வசதிகளை எழுதுக.

| | | |
|---|---|---|
| ATM/ CDM | - | தன்னியக்க டெலர் இயந்திரம் |
| EFTPOS | - | இலத்திரனியல் நிதிமாற்று விற்பனை மையம் |
| Telebanking | - | தொலைபேசி வங்கிச் சேவை |
| Online Banking/ Internet Banking | - | இணையத்தள வழிமூலமான வங்கி வசதி |
| Television Banking Facilities | - | தொலைக்காட்சி மூலமான வங்கி வசதிகள் |
| Mobile Phone Network Banking Service | - | செல்லிடத் தொலைபேசி இணைய வங்கிச் சேவை |

**45.** காசோலைகளை எழுதும்போது கருத்திற்கொள்ள வேண்டிய நான்கு விடயங்கள் தருக.

1. வரையும் பொழுது விரைவில் அழிந்துவிடும் தீந்தை வகைகளைப் பயன்படுத்தக் கூடாது
2. அடியிதழில் காசோலையின் விபரங்களைப் பதிவு செய்தல் வேண்டும்
3. வரையும் பொழுது ஏற்படும் பிழைகளைத் தனியொரு கோட்டினால் வெட்டி கட்டளை இடுபவரின் பூரண கையொப்பம் இடப்படல் வேண்டும்
4. கட்டளை இடுபவரின் கையொப்பம் ஏற்கனவே வங்கிக்கு சமர்ப்பித்த கையொப்பத்தை ஒத்ததாக இருத்தல் வேண்டும்
5. காசோலையில் எழுதப்படும் திகதி, பாதுகாப்பு என்பன தொடர்பில் கவனம் இருத்தல் வேண்டும்
6. வெற்றுக் காசோலையில் கையொப்பம் இடாதிருத்தல் வேண்டும்
7. இலக்கங்களையும் எழுத்துக்களையும் எழுதும் போது இடைவெளிகள் விடக்கூடாது.

**46.** சர்வதேச வர்த்தகத்தின் வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்தும் நான்கு காரணிகளைத் தருக.

1. உலக மயமாக்கலின் வளர்ச்சி
2. தொழில்நுட்ப /தொடர்பாடல் தொழில்நுட்ப வளர்ச்சி /உட்கட்டமைப்பு வசதிகளின் வளர்ச்சி
3. வியாபாரத் தடைகள் குறைவாகக் காணப்படல்
4. வியாபார உடன்படிக்கைகளும் வியாபாரக் கூட்டணிகளும்
5. வேறுபட்ட நாடுகளுக்கிடையில் காணப்படும் பழக்க வழங்கங்கள்
6. நாடுகளுக்கிடையிலான உறவு.

**47.** நிறுவனமொன்றுக்குக் கட்டுப்பாட்டுச் செயன்முறை முக்கியமானதாக அமைவதற்கான நான்கு காரணங்கள் தருக.

1. உற்பத்தியின் தரத்தினைப் பாதுகாத்துக் கொள்வதற்கு
2. கிரயத்தை இழிவு படுத்திக் கொள்வதற்கு
3. தவறுகளை இழிவுபடுத்திக் கொள்வதற்கு அல்லது பூச்சிய மட்டத்திற்கு கொண்டு வருவதற்கு
4. சூழலில் ஏற்படும் மற்றங்களுக்கேற்ப செம்மைப்படுத்துவதற்கு
5. நிறுவனத்தினது முன்னேற்றத்தை மதிப்பிடவும் தவறுகளைத் திருத்துவதற்கும்
6. நிறுவனத்தின் செயற்பாட்டுத் திறன் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்திற்கேற்ப இடம்பெறுகின்றது என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு.
7. வேறுபாடுகளை இலகுவாக அடையாளம் கண்டு அவற்றைத் திருத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள

**48.** பண்டப் பெயருடன் (brand name) உற்பத்திப்பொருளொன்றைச் சந்தைக்கு வழங்குவதால் உற்பத்தியாளர் பெற்றுக்கொள்ளக்கூடிய நான்கு அனுகூலங்களை எழுதுக.

1. ஏனைய போட்டியாளர்களின் பண்டக்குறியிலிருந்து தனது நிறுவனப் பண்டக்குறியை வேறுபடுத்தி இனங்கான முடியுமாயிருப்பதால் தனது தனித்துவத்தினைப் பேணிக் கொள்ள முடிதல்.
2. கட்டளைகளைப் பெறும் போது இலகுவாயிருத்தல்
3. சட்டரீதியான பாதுகாப்பைப் பெற முடிதல்
4. நுகர்வோரிடையே பண்டக்குறி விசுவாசம் ஒன்றினை ஏற்படுத்த முடியுமாயிருத்தல்
5. சிறந்த பண்டக்குறியொன்றின் மூலம் நிறுவனத்தின் முழுமையான அடையாளத்தை (பிரதிவிம்பத்தை) மேம்படுத்த முடியுமாயிருத்தல்.
6. பண்டக்குறியில் சிறிய சிறிய வேறுபாடுகளைச் செய்வதன் மூலம் பல்வேறுபட்ட நுகர்வுத் தொகுதிகளை இலக்கு வைக்க முடிதல்
7. வணிகத்திற்கு பெறுமதியொன்றை உருவாக்க முடிதல்

**49.** சாதாரண பங்குதாரர் ஒருவர் பங்கிலாபத்திற்கு மேலதிகமாக கம்பனியில் இருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் நான்கு தருக.

1. உரிமையாளராகலாம்
2. மூலதன இலாபம்
3. மூலதன மாக்கல்
4. வாக்குகளிக்கும் உரிமை
5. பிணையாக வைக்கலாம்
6. பங்குப் பிளவு

**50.** பின்வரும் ஒவ்வொரு குறியீட்டினாலும் கருதப்படுவது யாது?

1. முகநூல் ( Face Book )
2. டுவிட்டர் / கீச்சகம் (Twitter )
3. மீள் சுழற்சி
4. விசேட தேவை உடையவர்களுக்கு / Facilities for special need people

## பகுதி II
## வணிகக் கல்வி

1. (i) (அ) தேவைகள், விருப்பங்கள் மற்றும் உற்பத்திப்பொருட்கள் ஆகிய பதங்களை வரையறுப்பதுடன் அவற்றுக்கிடையிலான தொடர்பை விளக்குக.

**தேவை**

மனிதன் உயிர் வாழ்வதற்கு அத்தியாவசியமானவை.

**விருப்பம்**

தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான பல்வேறு வழிகள் அல்லது மனிதன் தனது தேவைகளைப் பூர்த்தி செய்ய குறிப்பிட்ட பொருள் மீது காட்டும் நாட்டம்

**உற்பத்திப் பொருள்**

மனித தேவை மற்றும் விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்காக சந்தைக்கு வழங்கப்படும் அனைத்தும்.

**தொடர்பு**

மனிதன் உயிர் வாழ்வதற்கு அத்தியாவசியமான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான பல்வேறு முறைகள் விருப்பங்கள் ஆகும். தேவைகள் விருப்பங்களை பூர்த்தி செய்வதற்கான தீர்வு உற்பத்திப் பொருளாகும்.

தேவை (அடிப்படை) விருப்பம் (முறைகள்) உற்பத்திப் பொருள் (தீர்வு)

(வரைவிலக்கணங்கள் $3 \times 1/2 = 1\ 1/2$ புள்ளிகள் (தொடர்பு1/2 புள்ளி)

(ஆ) உற்பத்தி முறையானது நேர் உற்பத்தியிலிருந்து நேரில் உற்பத்திக்கு மாறியதற்கான பிரதான காரணங்கள் **நான்கு** தருக.

- தனியாள் சிறப்புத் தேர்ச்சி, மிகை உற்பத்தி, பொருள் பரிமாற்றம், வியாபாரம் தோன்றல்

$4 \times 1/2 = 2$ புள்ளிகள்

(ii) (அ) இன்றைய இளம் தலைமுறையினர் விவசாயத்தில் ஈடுபடுவதற்கு விருப்பமற்றவர்களாகக் காணப்படுகின்றனர். இந்நிலைமைக்கான **நான்கு** காரணங்கள் தருக.

1. வருமானம் தொடர்பில் நிச்சயமற்ற தன்மை / அறுவடை தொடர்பில் காணப்படும் நிச்சயமற்ற தன்மை
2. இளம்தலைமுறையினர் மத்தியில் விவசாயம் தொடர்பான தொழில்சார் பிரதிமை ( Professional image) காணப்படாமை
3. சமூகத்தில் விவசாயம் தொடர்பில் நன்மதிப்பு காணப்படாமை
4. மூலதனத்தைப் பெறுவதில் காணப்படும் சிரமம்
5. சந்தை வாய்ப்பு தொடர்பான பற்றாக் குறை
6. விவசாயம் தொடர்பான திறன்கள் காணப்படாமை
7. விவசாயம் தொடர்பான பொருத்தமான அறிவு, திறன், மனப்பான்மை என்பன கல்வி முறையில் காணப்படாமை
8. தனிப்பட்ட மனப்பாங்கு
9. உட்கட்டமைப்பு வசதிகளினதும், அரச அனுசரணைகளினதும் பற்றாக்குறை
10. தொழில் வாய்ப்பின்மை.
11. குறுங்கால இலாப எதிர்பார்க்கை

$4 \times 1/2 = 2$ புள்ளிகள்

(ஆ) பேரண்டச் சூழலின் **இரண்டு** விசேட குணாம்சங்கள் தருக.

1. விரைவாக மாறக் கூடியது / நிச்சயமற்றது
2. அடிக்கடிமாறும்
3. பல்வேறுபட்ட தாக்கங்களுக்கு உட்படும்
4. சிக்கல் நிறைந்தது
5. போட்டித் தன்மையானது
6. பூகோளமயமானது
7. ஒன்றுடன் ஒன்று இடைத் தொடர்புடையது.
8. கட்டுப் படுத்த முடியாது

$2 \times 1 = 2$ புள்ளிகள்

(iii) பூகோளமயமாதல் என்றால் என்ன என்பதனை வியாக்கியானம் செய்வதுடன் அது உள்நாட்டு வணிகங்களின் மீது ஏற்படுத்தும் சார்பான மற்றும் எதிரான செல்வாக்குகள் **இரண்டு** வீதம் விவரிக்குக.

1. பொருளாதார, அரசியல், சமூக, தொழினுட்ப மற்றும் கலாசார ரீதியில் நாடுகளுக்கிடையில் ஏற்படும் இடைத் தொடர்பு.
2. மூலதனம், பொருட்கள், சேவைகள், தொழினுட்பம், தகவல், நபர்கள், அரசு மற்றும் நிறுவனங்களுக்கிடையில் கட்டியெழுப்பப்படும் சுயாதீனமான இடைத்தொடர்பு.
3. உலகம் முழுவதும் ஒரே சந்தை என்ற அடிப்படையில் வியாபாரத் தடைகள் நீக்கப்பட்டு ஒரு நாட்டினது அபிவிருத்தியின் நன்மைகளை உலக நாடுகள் அனைத்திலும் அனுபவிக்கக் கூடிய சூழலை உருவாக்கும் நடவடிக்கை.

| சார்பானவை | எதிரானவை |
|---|---|
| - உலக ரீதியான பரந்த சந்தை வாய்ப்பு<br>- நவீன தொழில்நுட்பங்கள் வந்து சேரல்<br>- புதிய அறிவு பரிமாற்றம்<br>- அளவுத்திட்ட சிக்கனம் பெறமுடிதல்<br>- உட்கட்டமைப்பு, வணிக சேவைகள் வசதி அதிகரிப்பு<br>- கூடுதலான மூலதன வாய்ப்பு | - உலகமயமான போட்டிக்கு முகம் கொடுக்க வேண்டியிருத்தல் / உள்நாட்டு கைத்தொழில் பலவீனமடைதல்<br>- மூளை சாலிகள் வெளியேற்றம் திறமைசாலிகளின் பற்றாக்குறை உருவாதல்<br>- சந்தைப்படுத்தல் செலவுகளில் ஏற்படும் அதிகரிப்பு<br>- வாழ்க்கைப் பாங்கிலும் கலாசாரத்திலும் ஏற்படும் மாற்றம் உள்நாட்டுக் கைத்தொழிலை பலவீனமடையச் செய்யும்<br>- சூழல் பாதிப்பு ஏற்படல். |

2 X1/2 = 1 புள்ளி 2 X1/2 = 1 புள்ளி

(iv) (அ) 'நிறுவன கலாசாரம்' என்றால் என்ன என்பதனை வியாக்கியானம் செய்க.

(ஆ) நிறுவன கலாசாரத்தின் பலம் ஒன்றையும் பலவீனம் ஒன்றையும் ஒவ்வொரு உதாரணம் தருவதன் மூலம் விளக்குக.

நிறுவனம் ஒன்றின் பெறுமதி, நம்பிக்கை, விழுமியம் என்பனவற்றின் அடிப்படையில் பொதுவாக நிறுவனத்தில் விருத்தி செய்யும் நடத்தை முறை.

(ஆசிரியர் வழிகாட்டியில் உள்ள வரைவிலக்கணங்களுக்கும் புள்ளிகள் வழங்கவும்.) 2 புள்ளிகள்

| பலம் | பலவீனம் |
|---|---|
| - பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட நடத்தைப் பாங்கு<br>உதாரணம் : பொதுவான நடத்தை<br>- நம்பிக்கையான உறவு / தொடர்பு<br>உதாரணம் : ஊழியரிடையே முரண்பாடின்மை, அர்ப்பணிப்பான ஊழியர்<br>- ஒத்துழைப்பு உதாரணம் : குழு வேலை<br>- ஒருவரை ஒருவர் மதித்தல்<br>உதாரணம்: பதவிகளை இனங்கண்டு மதித்தல். வேலையை இனங்காணல், சமூக அடையாளம் | - மரபு, பாரம்பரியங்களை மதித்தல் பின்பற்றுதல்<br>உதாரணம் : மாற்றங்களை ஏற்றுக் கொள்ளாமை, மனோநிலை மாற்றமின்மை<br>- வேறுபாடான உபசரணை<br>உதாரணம்: ஊழியர்களிடையே பேதப்படுத்தல்<br>- நம்பிக்கை விழுமியம் பெறுமானங்களிடையே காணப்படும் நிலை<br>உதாரணம் : உபகலாசாரம் உருவாதல், ஊழியர் முரண்பாடு |

குறிப்பிட 1/2 புள்ளி, உதாரணத்திற்கு 1/2 புள்ளி

(v) வணிகத்தின் சமூகப் பொறுப்பு என்றால் என்னவென விளக்குவதுடன் தற்கால , சமூகத்தில் அதன் முக்கியத்துவத்திற்கான **மூன்று** காரணங்களையும் எழுதுக.

சமூகப் பொறுப்பு என்பது சமூக பொருளாதார சூழல் என்பவற்றுக்கிடையிலான நிர்வாக இணைப்பு வணிகத்தில் வாடிக்கையாளர் மாத்திரமின்றி அக்கறையுடைய அனைத்து தரப்பினருக்கும் நன்மை பயக்கும் விதத்தில் வணிக செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லுதல்.
(ஆசிரியர் வழிகாட்டியிலுள்ள வரைவிலக்கணங்களும் குறிப்பிடப்படலாம்)

(01 புள்ளி)

1. சூழலைப் பாதுகாப்பதற்கு அதிகரித்து வரும் சூழல் மாசடைதலைக் குறைக்க
2. வஞ்சகமான, துஷ்பிரயோகமான மற்றும் நெறிமுறையற்ற நடவடிக்கைகள் அதிகம் என்பதால் அவற்றைத் தடுப்பதற்கு அல்லது அவற்றை இல்லாதொழிப்பதற்கு.
3. நியாயமான சமூகத்தை உருவாக்க பாரிய பிரச்சினையான வறுமை,பசி,பட்டினி போன்றவற்றை இல்லாதொழிக்க.
4. ஒழுக்கமற்ற சமூகத்தைக் குறைக்க, ஒழுக்க விழுமியங்களைக் கட்டியெழுப்ப.
5. உலக வளங்கள் அருமையாகக் காணப்படுவதனால் அவற்றை வினைத்திறனாகப் பயன்படுத்த

3x1= 3 புள்ளி

2. (i) உணவு உற்பத்தியாளர் ஒருவர் உற்பத்திப்பொருட்களின் தரத்தை உறுதிப்படுத்துவதற்கான ஒழுக்கக்கோவை ஒன்றைத் தயாரிக்கும்போது கருத்திற்கொள்ள வேண்டிய **நான்கு** காரணிகளைக் குறிப்பிட்டு, அவர் ஏன் இக்காரணிகளைக் கருத்திற்கொள்ள வேண்டும் என்பதனை விளக்குக.

| கருத்திற்கொள்ள வேண்டிய விடயங்கள் | காரணங்கள் |
|---|---|
| 1. மூலப் பொருட்களும்ஏனைய உள்ளீடுகளும் (வழங்குனர் பின்னூட்டல்) | கொள்வனவு செய்தல், விலையிடல் தொடர்பில் ஒழுக்கங்களை விருத்தி செய்தலும் கருத்தில் கொள்ளலும் |
| 2. மூலப் பொருட்களும் விநியோகமும் | மூலப் பொருட்கள் மற்றும் உள்ளீடுகள் தொடர்பில் தரத்தை உறுதி செய்ய, ஒழுக்கத்தை விருத்தி செய்ய |
| 3. செயன்முறை | தரத்தைப்பேணஊழியர்களதுபங்களிப்புக்களையும் ஒழுக்கங்களையும் கட்டியெழுப்ப, ஒழுக்கத்தை விருத்தி செய்ய |
| 4. இலாபத்திலும் பார்க்க கூட்டுரு சமூகப் பொறுப்பு (உரிமையாளர்) | தரத்திற்கும் இலாபத்திற்கும் இடையிலான சமநிலையை பேண, ஒழுக்கத்தை விருத்தி செய்ய |
| 5. ஒழுக்கத்தைப் பாதுகாக்க (போட்டியாளர்) | போட்டிசார் உபாயங்கள் தொடர்பிலான ஒழுக்கத்தை விருத்தி செய்ய |

(4X1/2 = 2 புள்ளிகள்) (4X1/2 = 2 புள்ளிகள்)

(ii) விவசாய உற்பத்திப்பொருட்களின் மீது இறக்குமதி வரிகளை விதிப்பதனால் பாதிப்படையும் **நான்கு** தரப்பினரைப் பெயரிட்டு, அதன் மூலம் ஒவ்வொரு தரப்பினருக்கும் கிடைக்கும் **ஒவ்வொரு** அனுலத்தையும் எழுதுக.

| பாதிப்படையும் தரப்பினர் | அனுகூலங்கள் |
|---|---|
| 1. உள்நாட்டு விவசாய உற்பத்தியாளர் | - உற்பத்தி பாதுகாக்கப்படும்<br>- சர்வதேசப் போட்டி குறையும்<br>- உயர்வான விலை கிடைக்கும் |
| 2. உள்நாட்டு விவசாய வாடிக்கையாளர்கள் | - உள்நாட்டு உற்பத்தி விருத்தியின் காரணமாக புதிய பொருட்கள் சேவைகளை நுகர முடிதல் |
| 3. உள்நாட்டு விவசாய விநியோகத்தர் | விற்பனையும் இலாபமும் அதிகரித்தல் |
| 4. அரசாங்கம் | - வரி வருமானம் அதிகரிக்கும்<br>- இறக்குமதி குறைவதனால் சென்மதி நிலுவைக் கொடுப்பனவு குறைவடையும்<br>- மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்கும்<br>- அந்நியச் செலாவணி மீதப்படுத்தப்படும் |
| 5. சமூகம் | - தேசிய கைத்தொழில் விருத்தி வேலை வாய்ப்புக்கள் உருவாகும்<br>- புதிய வருமான வழிகள் உருவாகுதல். |
| 6. மாற்று முதலீட்டாளர்கள் | - ஊக்குவித்தல். |

(4x1/2 = 2 புள்ளிகள்) (4x1/2 = 2 புள்ளிகள்)

(iii) வணிகங்களை வெற்றிகரமாகக் கொண்டு நடாத்துவது தொடர்பில் பல்வேறு வழிகளில் அரசாங்கம் தலையீடுகளை மேற்கொள்கின்றது. அரசாங்கம் தலையிடுகின்ற அவ்வாறான **நான்கு** முறைகளைக் குறிப்பிடுவதுடன் அவ்வொவ்வொரு முறையில் இருந்தும் அரசாங்கம் எதனை எதிர்பார்க்கின்றது என்பதனையும் விவரிக்குக.

| அரசாங்கம் தலையிடும் முறைகள் | அரசு எதிர்பார்க்கும் விடயங்கள் |
|---|---|
| உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குபவராக செயற்படல் | வணிகங்கள் வணிக நடவடிக்கைகளால் கூடுதலான முதலீடுகளை இடுவதனை ஊக்குவிக்க |
| போட்டியாளர்களாகத் தொழிற்படல் | சிறந்த தரமான சேவையை ஏற்படுத்தல் |
| கொள்கை உருவாக்குவர்களாகத் தொழிற்படல் | முறையான வணிக நடவடிக்கைகளை ஏற்படுத்தல் |
| கூட்டுருத் திட்டங்கள் உருவாக்குபவராக தொழிற்படல். | விரயங்களை ஊழல்களை தடுத்தல் |
| ஊக்கிவிப்பாளர்களாகத் தொழிற்படல் | புதிய முதலீட்டாளர்களை கவரவும் இருப்பவர்களைத் தக்கவைத்துக் கொள்ளவும் |
| வரி அறவீட்டாளர்களாகத் தொழிற்படல் | தேவையற்ற வணிகங்கள் உள் வருவதைத் தடுத்தல், அரச வருமானத்தை அதிகரித்தல் வருமான வேறுபாட்டை நீக்குதல் |
| வாடிக்கையாளராகத் தொழிற்படல். | விற்பனை அதிகரிக்க, ஊக்குவிக்க |

4 x 1/2 = 2 புள்ளிகள் 4 x 1/2 = 2 புள்ளிகள்

(iv) (அ) பங்காளர்களிடையே முரண்பாடுகளைத் தோற்றுவிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் **நான்கு** காரணங்களைச் சுருக்கமாக விளக்குக.

1. முகாமைத்துவ தீர்மானம் எடுக்கும் போது
2. வணிக நடவடிக்கைகளில் தலையிடும் போது
3. இலாபநட்டம் பகிரும் போது
4. கடன் மூலதனத்திற்கான வட்டியைப் பெறும் போது
5 மூலதனத்திற்கான வட்டியைப் பெறும் போது
6. பங்குடைமை ஆதனத்தைப் பயன்படுத்தும் போது
7. முன்னுரிமைகளையும் சலுகைகளையும் அனுபவிக்கும் போது / வரப்பிரசாதங்களை அனுபவிக்கும் போது
8. உரிமையை மாற்றும் போது (பங்காளர் சேரும் போதும் விலகும் போதும்)
9. பற்று, பற்று வட்டியைப் பெறும் போது
10. நிறுவனத்தைக் கலைக்கும் போது (4 x 1/2 = 2 புள்ளிகள்)

(ஆ) அரசாங்கமானது பொதுமக்களுக்குத் தேவையான உற்பத்திப்பொருட்களை அரச நிறுவனங்களின் ஊடாக வழங்குவதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. அவ்வாறான **நான்கு** வகை அரச நிறுவனங்களைப் பெயரிடுக.

- அரச கூட்டுத் தாபனம் /அதிகார சபைகள் / சபைகள் / ஆணைக்குழு
- அரச திணைக்களம்
- அரச கம்பனிகள்
- வணிக அமைப்புக்கள் (உள்ளூராட்சி மன்றம் மற்றும் மாகாணசபைகளின் கீழ் வருபவை.

(4 x 1/2 = 2 புள்ளிகள்)

(மொத்தம் 4 புள்ளிகள்)

(v) அங்கீகாரம் வழங்குபவரைப் போன்று அங்கீகாரம் பெறுபவரும் நிறைவேற்ற வேண்டிய ஒரு தொகுதி நடவடிக்கைகள் காணப்படுகின்றன. அங்கீகாரம் பெறுபவர் ஒருவரால் நிறைவேற்றப்படவேண்டிய **நான்கு** நடவடிக்கைகளைச் சுருக்கமாக விவரிக்குக.

- அங்கீகாரம் வழங்கும் கம்பனிகள் விதிக்கின்ற சட்ட திட்டங்களுக்கு ஏற்ப செயற்படுவதற்கு உடன்படல்
- மூலதனத்தை முதலீடு செய்தல்
- அங்கீகாரம் வழங்கும் கம்பனியிலிருந்து அல்லது அந் நிறுவனம் அனுமதித்த வழங்குனர்களிடமிருந்து மாத்திரமே பொருட்களை கொள்வனவு செய்தல்
- அங்கீகாரமளிக்கப்பட்ட கம்பனியுடன் செய்த ஒப்பந்தத்திற்கேற்ப இறையைச் செலுத்தல்

குறிப்பிட 4 x 1/2= 2 புள்ளிகள்
விளக்க 4 x 1/2= 2 புள்ளிகள்
மொத்தம் 4 புள்ளிகள்

**3.** (i) உமது நண்பர் ஒருவர் வேலை செய்வதற்குப் பதிலாக தனது சொந்த வணிகத்தினை ஆரம்பிக்க விரும்புகின்றார். எனினும் இது தொடர்பில் அவரிடம் தயக்கமும் காணப்படுகின்றது. வேலை செய்வதிலும் பார்க்க வணிகம் ஒன்றை ஆரம்பிப்பதன் அனுகூலங்களை அவருக்கு விளக்குவதற்காக **நான்கு** காரணங்களைக் குறிப்பிடுக.

1. தமது திறன்கள், அறிவுத் திறன், அனுபவங்கள் பயன்படுத்துவதிலான ஆற்றலை வெளிப்படுத்த முடியும்
2. சுயாதீனமாக செயற்பட சந்தர்ப்பம் கிடைத்தல்.
3. தமது அர்பணிப்புகள், முயற்சி மூலம் உயர் பெறுபேற்றைப் பெறலாம்.
4. வேலை தேடுபவர் என்பதிலிருந்து வேலை உருவாக்குபவராக காணப்பட முடியும்.
5. சமூக அந்தஸ்து, உயர்வான நன்மதிப்பையும் வரவேற்பையும் பெற முடியும்
6. சுய திருப்தியை பெற்றுக் கொள்ள முடியும்
7. தனது நிறுவனத்தின் தலைவர் தானே எனும் எண்ணம் காணப்படும்.
8. சம்பளத்திற்கு மேலதிகமாக ஏனைய நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்
9. சமூகத்திற்குச் சிறந்த சேவையை வழங்க முடியும்.

(4 x 1 = 4 புள்ளிகள்)

(ii) அதிகளவான முயற்சியாளர்கள் நாட்டுக்குத் தேவையானவர்களாகக் காணப்படுகின்ற போதும் குறைவானவர்களே உருவாகின்றனர். முயற்சியாளர்களின் குறைவான உருவாக்கத்திற்கு ஏதுவான **நான்கு** காரணிகளைச் சுருக்கமாக விவரிக்குக.

1. முயற்சியாண்மைசார் திறன்களை அபிவிருத்தி செய்யக் கூடியவாறு கல்வி முறைமை காணப்படாமை.
2. உட்கட்டமைப்பு வசதிகள் போதியளவு காணப்படாமை
3. நிதி மற்றும் ஏனைய வசதிகள் தொடர்பான பிரச்சினைகளை எதிர் கொள்ளல்
4. பொருத்தமற்ற வரிக் கொள்கையும் சட்டவாக்கமின்மையும்
5. நாட்டு மக்களின் மனப்பாங்கு (அரச தொழில் செய்ய வேண்டும் என்ற மனப்பாங்கு) தேவையற்ற கலாசார விழுமியங்கள்
6. இடரை எதிர்கொள்வதற்கு விருப்பமின்மை
7. புத்தாக்க திறமையுடைய, ஆளுமையுடைய நபர்களின் பற்றாக்குறை
8. ஆய்வு அபிவிருத்தி நடவடிக்கைகளில் கவனம் செலுத்துவதில் ஆர்வமின்மை.

(4 x 1 = 4 புள்ளிகள்)

(iii) பலநாடுகளில், பாரியளவு நிறுவனங்களிலும் பார்க்க அதிக எண்ணிக்கையான சிறிய மற்றும் நடுத்தர அளவு முயற்சிகள் சிறந்து விளங்குகின்றன. அவ்வாறான அதிகரிப்பிற்குக் காரணமான சிறிய மற்றும் நடுத்தர அளவு முயற்சிகளுக்கு உரித்துடைய இயல்பான குணாம்சங்கள் **நான்கு** தருக.

1. குறைவான மூலதன முதலீட்டுடன் ஆரம்பிக்க முடிதல்
2. ஆரம்பித்தல் இலகு (விரும்பும் இடத்தில் ஆரம்பிக்க முடியும்)
3. பாரிய நிறுவனங்கள் செய்யமுடியாதவற்றைச் சிற்றளவு வணிக முயற்சிகளால் செய்ய முடியும்.
4. பாரிய சட்டக் கட்டுப்பாடுகள் இல்லை.
5. எவ்வகையான நிறுவன அமைப்பாகவும் ஆரம்பிக்க முடியும்
6. பாரிய நிறுவனங்களுக்குத் தேவையான மூலப் பொருள், உதிரிப்பாகங்கள் என்பவற்றைப் பெற்றுக் கொடுத்தல்
7. பல்வேறு வகையான ஊக்குவிப்புக்கள் கிடைத்தல்.
8. குறைந்த தொழிலாளர்களைப் பயன்படுத்துவதுடன் வணிகத்திற்கு பங்களிப்புச் செய்யும் ஆற்றல்.
9. முகாமைத்துவத்தை சுயாதீனமாக மேற்கொள்ள முடிதல்.
10. பரம்பரை பரம்பரையாக மேற்கொண்டு வருதல்.

(4 x 1 = 4 புள்ளிகள்)

(iv) வணிக அபிவிருத்திக்காக வித்தியாசமான பல சேவைகளை நிதிக் கம்பனிகள் வழங்குகின்றன. வணிகங்களுக்கு நிதிக் கம்பனிகளால் வழங்கப்படும் **நான்கு** சேவைகளை விவரிக்குக.

1. வாடகைக் கொள்வனவுக்கு நிதி வசதியளித்தல்
2. குத்தகை வசதி
3. கடன் வசதிகளை வழங்குதல்
4. கால வைப்புக்களை ஏற்றல்
5. பணப்பரிமாற்று வசதிகள் வழங்குதல்
6. பங்கு ஒப்புறுதியளித்தல்
7. ஆலோசனை சேவை (4 x 1 = 4 புள்ளிகள்)

(v) "இலத்திரனியல் பணத்தைப் பயன்படுத்துவதில் சில அனுகூலங்களும் பிரதிகூலங்களும் காணப்படுகின்றன." இலத்திரனியல் பணப் பயன்பாட்டின் **இரண்டு** அனுகூலங்களையும் **இரண்டு** பிரதிகூலங்களையும் எடுத்துக்காட்டுவதன் மூலம் இக்கூற்றை நியாயப்படுத்துக.

**அனுகூலம்**

1. கொடுக்கல் வாங்கல்களின் போது கிரயம் குறைவடைதல்
2. பணத்தினை கொண்டு செல்வதில் போது இடரில்லாத தன்மை, பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படல்
3. 24 மணிநேரமும் 7 நாட்களும் கொடுக்கல் வாங்கல்களுக்குப் பயன்படுத்த முடிதல்
4. கொடுப்பனவுக் கருமங்கள் இலகவாக அமைதல்
5. பல்வேறு அனுகூலங்கள் கிடைக்கப்பெறல் உதாரணம் : நட்சத்திரப் புள்ளி, கழிவுகள்
6. வெளிநாட்டு கொடுக்கல் வாங்கல்களுக்கு பயன்படுத்த முடிதல்
7. கொடுக்கல் வாங்கல் இடம்பெற்றமைக்கு சான்றாகப் பயன்படுத்தல்.

(2x1 = 2 புள்ளிகள்)

**பிரதிகூலம்**

1. வட்டி, தாமதக் கட்டணம் போன்ற கிரயங்களை ஏற்க வேண்டியிருத்தல்
2. மோசடி நடவடிக்கைகள் இடம்பெறல்
3. தேவையற்ற நுகர்வு முறைகளுக்கு பழக்கப்படல்
4. தொழில்நுட்பத்தில் ஏற்படும் தவறுகள் காரணமாக கொடுக்கல் வாங்கல்களில் தடைகள் ஏற்படல்
5. சகல வாடிக்கையாளர்களுக்கும் கொடுக்கல் வாங்கல் செய்வதற்கான ஆற்றலும் பலமும் காணப்படாமை
6. இலத்திரனியல் பணக் கொடுக்கல் வாங்கல்களுக்கான வரையறுக்கப்பட்ட வாய்ப்புக்கள்
7. இலத்திரனியல் பணக் கொடுக்கல் வாங்கல்கலிலுள்ள வரையறைகள்

(2x1 = 2 புள்ளிகள்)

(மொத்தம் 4 புள்ளிகள்)

4. (i) (அ) காப்புறுதி செய்ய முடியாத இடர்களுக்கு **நான்கு** உதாரணங்கள் தருக.

1. பரீட்சையில் சித்தியடையாமை,
2. அன்பை இழத்தல்
3. இயற்கையான காரணங்களால் உருவாகும் வணிக இடர்கள் உதா: பெறுமானத் தேய்வு
4. பிழையான முகாமைத்துவத் தீர்மானம்
5. தனிப்பட்ட ஆற்றல்
6. சிறிய நட்டங்கள்

(4x1/2 = 2 புள்ளிகள்)

(ஆ) காப்புறுதிக் கைத்தொழிலின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்வதற்காக இலங்கை காப்புறுதிச் சபை ஸ்தாபிக்கப்பட்டது. இச் சபையினால் நிறைவேற்றப்படும் **நான்கு** பணிகளைக் குறிப்பிடுக.

1. காப்புறுதிக் கம்பனிகளைக் பதிவு செய்தல்
2. காப்புறுதி முகவரைப் பதிவு செய்தல்
3. காப்புறுதி கம்பனிகளது பதிவை இரத்துச் செய்தல்
4. காப்புறுதி நிதியினை முதலீடு செய்தல் தொடர்பான நியதியைத் தீர்மானித்தல்
5. காப்புறுதித் தொழிலை முதன்மைப் படுத்தி அபிவிருத்தி செய்தலும் அரசிற்கு ஆலோசனை வழங்கலும்
6. காப்புறுதி வணிகம் தொடர்பான அரச கொள்கைகளையும் செயல் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தல்.
7. காப்புறுதி வணிகத்தின் மேம்பாட்டிற்காக செஸ் (Cess) வரியை விதித்தல்

(4x 1/2 = 2 புள்ளிகள்)

(மொத்தம் 4 புள்ளிகள்)

(ii) (அ) நுவரெலியாவில் இருந்து கொழும்புக்குப் பழங்களைக் கொண்டு செல்வதற்கான ஒரு போக்குவரத்துச் சேவையைத் தெரிவுசெய்யும்போது கருத்திற்கொள்ள வேண்டிய **நான்கு** காரணிகளைக் குறிப்பிடுக.

1. பழங்களின் தன்மை
2. வேகம்
3 கொள்ள்ளவு
4. பாதுகாப்பு
5 கிடைப்பனவுத் தன்மை
6. கிரயம்

(4x 1/2 = 2 புள்ளிகள்)

(ஆ) புகையிரதத்தின் மூலம் பொருட்கள் கொண்டு செல்வதனை அதிகரிக்கச் செய்வதற்கு நீர் கூறக்கூடிய **நான்கு** ஆலோசனைகளைக் காரணங்களுடன் விவரிக்குக.

1. சரக்குப் புகையிரத பெட்டிகளை நவீனப்படுத்தல்.
2. பொருள் போக்குவரத்துக்கு ஏற்ப பெட்டிகளை அதிகரித்தல்
3. இணைந்த உதவிச் சேவைகளை அதிகரித்தல் அதாவது ஏனைய போக்குவரத்து சேவைகளை புகையிரத நிலயத்திலிருந்து ஏனைய பகுதிகளுக்கு இணைத்தல் அதிக பொருள் புகையிரத தரிப்பிடங்களை அதிகரித்தல்
4. பூகோள இடைநிலைப்படுத்தல் முறைமையைப் (GPS) பயன்படுத்தி பொருள் போக்குபவரத்துத் தொடர்பான தகவல்களை பெற்றுக் கொடுத்தல்.
5. பல்வேறுவகையான பொருட்களுக்கு ஏற்ப புகையிரதப் பெட்டிகளை நவீன மயப்படுத்தல்
6. பஸ் நிலையத்திற்கும் வணிக நிலையங்களுக்கும் இடையிலான இலத்திரனியல் புகையிரத தொடர்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
7. பொருட்களை ஏற்றியிறக்கல் தொடர்பில் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தல்

(பொது அறிவுடன் எழுதும் பொருத்தமான விடைகளையும் கருத்தில் கொள்ளவும்)

(4x 1/2 = 2 புள்ளிகள்)

(மொத்தம் 4 புள்ளிகள்)

(iii) (அ) ஒழுங்கான கோவை முறைமையை (Filling system) பேணுவது தொடர்பில் முகாமைத்துவ உதவியாளர்களுக்காக நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சியில் உமது விரிவுரையில் பங்குபற்றியவர்களின் பின்னூட்டலானது திருப்தியான மட்டத்தை எடுத்துக்காட்டவில்லை என நிறுவன முகாமையால் உமக்குத் தெரிவிக்கப்பட்டது. அப்பின்னூட்டலில் உமது விரிவுரை தொடர்பில் இருந்திருக்கக்கூடிய **நான்கு** பலவீனங்களைக் குறிப்பிடுக.

1. பிழையான மொழிப்பிரயோகம்
2. பொருத்தமான உதாரணங்கள் பயன்படுத்ததாமை
3. தேவையற்ற விளக்கங்களை வழங்கியமை
4. உச்சரிப்பு சரியாக இல்லாமையும் குரல் வளக் கட்டுப்பாட்டில் காணப்படும் பிரச்சினையும்.
5. உணர்வுகளும் நிலையும் பொருத்தமற்றிருத்தல்
6. விரிவுரையாளருக்கும் பங்குபற்றுனர்களுக்கும் இடையிலான தொடர்புகளின் பற்றாக்குறை.
7. பங்குபற்றுனர்களைக் கவராமை.
8. இடையிடையே பின்னூட்டல்களைப் பெற்றுக்கொள்ளாமை.
9. நேர முகாமைத்துவம் பின்பற்றப்படாமை. (4x 1/2 = 2 புள்ளிகள்)

(ஆ) பெரும்பாலான நிறுவனங்கள் தமது தொடர்பாடல் நடவடிக்கைகளுக்காக இலத்திரனியல் தபாலை பயன்படுத்துகின்றன. இலத்திரனியல் தபாலைப் பயன்படுத்துவதன் **இரண்டு** அனுகூலங்களையும் **இரண்டு** பிரதிகூலங்களையும் தருக.

| அனுகூலம் | பிரதிகூலம் |
|---|---|
| (1) செலவு குறைவு | (1) தொழில்நுட்ப தடைகள் |
| (2) வேகம் கூடியது / எந்த நேரத்திலும் அனுப்பலாம். | (2) தகவல்களை சரியாக விளங்கிக் கொள்ள முடியாமை |
| (3) நம்பகத் தன்மை | (3) இணைய வசதிகளின் பற்றாக்குறை |
| (4) எந்த இடத்திற்கும் தகவல் அனுப்புவதை உறுதி செய்து கொள்ளமுடியும் | (4) கணனித் தொழில் நுட்ப அறிவு குறைவு |
| (5) உலகில் வேண்டிய இடத்திற்கு அனுப்ப முடியும் | (5) நபர்களுக்கிடையிலான நேரடித் தொடர்பின்மை |
| (6) பல்வேறு நபர்களுக்கு ஒரே தடவையில் அனுப்பமுடிதல். | (6) கணணி நச்சுநிரல் (Virus) பிரச்சினை ஏற்படல் |
| (7) தகவல்களை சேமித்து வைக்கலாம் | |
| (8) படம், குரல் போன்றவற்றை அனுப்ப முடியும் | |
| (9) பின்னூட்டல் பெறமுடியும் | |
| (10) காகித பயன்பாடுகளின்மை | |

( 2 x 1/2 = 1 புள்ளி) ( 2 x 1/2 = 1 புள்ளி)

மொத்தம் 4 புள்ளிகள்

(iv) (அ) மரபுரீதியான சில்லறைக் கடைகள், சிறப்புச் சந்தைகளின் மூலம் பல அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுக்கின்றன. சிறப்புச் சந்தைகள் அதிகளவு வாடிக்கையாளர்களைக் கவர்வதற்கு ஏதுவான **நான்கு** காரணங்களை விவரிக்குக.

1. வாடிக்கையாளர்களைக் கவரக் கூடிய தன்மையும் சுத்தமான தன்மையும் காணப்படல்
2. வாகனத் தரிப்பிட வசதி காணப்படுதல்
3. தெரிவுக்கான சந்தர்ப்பம் அதிகம்
4. வங்கிச் சேவைகள் காணப்படல், மாதாந்தப் பயன்பாட்டுப் பட்டியல்களின்(Utility Bills) கொடுப்பனவு செய்யக்கூடிய வசதிகள்
5. இலத்திரனியல் பணப்பாவனை
6. சிறந்த பௌதீகசூழல் காணப்படல்
7. பல்வேறுபட்ட மேம்படுத்தல் முறைகள் காணப்படுதல் Eg: Star Points, கழிவுகள், Etc.
8. பல்வேறு பொருட்களை ஒரே கூரையின் கீழ் பெற்றுக் கொள்ளல்.
9. கூடுதலான நேரம் திறந்திருத்தல். ( 4x 1/2 = 2 புள்ளிகள்)

(ஆ) இலங்கை வணிகர்கள் சிலர் வெளிநாட்டுச் சந்தையில் காணப்படும் போட்டியை எதிர்கொள்ள முடியாதவர்களாக உள்ளனர். அவ்வாறான ஆற்றலின்மைக்கு ஏதுவான, வணிகர்களால் கட்டுப்படுத்தக்கூடிய மற்றும் கட்டுப்படுத்த முடியாத **இரண்டு** காரணிகள் வீதம் எழுதுக.

| கட்டுப்படுத்த கூடியவை | கட்டுப்படுத்த முடியாதவை |
|---|---|
| 1. சர்வதேச நியமத்திற்கேற்ப பொருள் தரமாக உற்பத்தி செய்யாமல் இருத்தல் | 1. உட்கட்டமைப்பு வசதி குறைவு |
| 2. சர்வதேச சந்தைக்கேற்ப பொருள், வடிவமைப்பு, அபிவிருத்தி, இற்றைப்படுத்தல் காணப்படாமை. | 2. தொடர்புடைய கைத் தொழில் நிறுவனங்களின் பற்றாக்குறை |
| 3. முறையான விளம்பர மேம்படுத்தல் முறைகள் பயன்படுத்தப்படாமை | 3. அரச கொள்கைகள் |
| 4. முறையற்ற விலைக் கொள்கை காணப்படல் | 4. பாதகமான சர்வதேச தொடர்பு |
| 5. போதிய வாடிக்கையாளர் சேவைகள் இன்மை | 5. அரச அனுசரணைகளின் பலவீனம் |
| 6. திறன்வாய்ந்த ஊழியர்களின் பற்றாக்குறை | 6. ஊழியர்களின் சம்பளங்களும் ஏனைய கிரயங்களும் அதிகரித்தல் |
| 7. சரியான சந்தையை அடையாளம் காணாமை. | 7. இறுக்கமான சட்டங்களும் பிரமாணங்களும் |
| 8. சந்தையினுள் உட்புகுதல் தொடர்பில் சரியான தந்திரோபாயத்தை / விநியோக முறையை பயன்படுத்தாமை. | |

( 2 x 1/2 = 1 புள்ளி)

( 2 x 1/2 = 1 புள்ளி)

மொத்தம் 4 புள்ளிகள்

(v) (அ) 'கைமாற்றத்தகாதது' எனக் குறுக்குக் கோடிடுவது காசோலையை வரைபவருக்கு எவ்வித விசேட அனுகூலங்களையும் வழங்காது. இக்கருத்துடன் நீர் உடன்படுகின்றீரா? உமது விடைக்கான காரணங்களைத் தருக.

1/2 புள்ளி

ஏற்றுக் கொள்ள முடியாது / இல்லை

~~குறித்த ஒரு காசோலை வரையுனர் வங்கியால் கொடுப்பனவு செய்யப்படுவதை உறுதிப்படுத்தி சான்றுறுதிப் படுத்துவதே இக்குறுக்குக் கோடிடலாகும். இங்கு வங்கியானது எந்த ஒரு நட்டங்களுக்கோ அல்லது மோசடிகளுக்கோ வகை கூற வேண்டியதில்லை.~~

"கைமாற்றத் தகாதது" என்ற குறுக்குக் கோடிடலானது கைமாற்றுவதை வரையறுக்கவில்லை. ஆனால் கைமாற்றல் மூலம் காசோலையைப் பெற்றுக் கொள்பவர் காசோலையைக் கைமாற்றி வழங்குபவரைவிட அதிக உரிமையைப் பெற்றுக் கொள்வதில்லை.

(1 1/2 புள்ளி)

(விளக்கத்துக்கேற்ப புள்ளி வழங்கவும்)

(ஆ) இலத்திரனியல் வியாபார (e-trade) விரிவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்தியுள்ள **நான்கு** காரணிகளை எழுதுக.

1. 24 மணிநேரம் 7 நாட்களும் செயற்படும்
2. ஆரம்ப செலவு குறைவு
3. விரைவான செயற்பாடு
4. பரந்த சந்தை வாய்ப்பு
5. விலை மட்டம் ஒப்பீட்டளவில் குறைவு / இடைநடுவர்கள் இல்லை
6. பொருள் தெரிவுக்கு பரந்த வசதி காணப்படல்
7. செயற்பாட்டு கிரயம் குறைவு
8. புதிய பொருள் பாவனைக்கு வசதி காணப்படல்
9. ஆவணப் பாவனை குறைவு
10. கொடுக்கல் வாங்கல்களில் வெளிப்படைத்தன்மை காணப்படல்
11. உயர்வான சரக்கிருப்பைப் பேணவேண்டியதில்லை
12. அதிக இடவசதி தேவையில்லை

குறிப்பிட 4 × 1/2 = 2 புள்ளிகள்
மொத்தம் 4 புள்ளிகள்

## பகுதி II

5. (i) (அ) "மற்றவர்களின் மூலமாக வேலை செய்துகொள்ளும் ஒரு கலை முகாமைத்துவம் ஆகும்.' இவ்வரைவிலக்கணத்தை விளக்குக.

மற்றவர்களின் மூலம் வேலை செய்விப்பவர்கள் முகாமையாளர்கள். மற்றவர்களின் மூலம் வேலையைப் பெற்றுக் கொள்ளும் இப்பாங்கு அவர்கள் மற்றவர் மூலம் வேலையை பயனுறுதி மிக்க வகையில் செய்விப்பதில் தங்கியுள்ளது. எனவே இந்த வரைவிலக்கணத்தின் பிரகாரம் மற்றவர்கள் மூலம் வேலையை செய்விக்கும் கலை முகாமைத்தும் ஆகும்.

(கோடிட்ட பகுதிக்கு 02 புள்ளிகள்)

(ஆ) உமது பாடசாலையில் கடந்த வாரம் நடைபெற்ற வணிக தினத்தை ஒழுங்குபடுத்துவதற்காக நியமிக்கப்பட்ட செயற்குழுவில் நீரும் ஒரு அங்கத்தவராவீர். இவ்வணிக தினத்தை நடாத்த உமது குழுவின் மூலம் செய்யப்பட்ட **நான்கு** பணிகளை உதாரணமாகப் பயன்படுத்துவதன் மூலம் முகாமைத்துவக் கருமங்களை விவரிக்குக.

திட்டமிடல் –
1. வணிக தினம் தொடர்பான நோக்கத்தை உருவாக்கல்
2. திகதியைத் தீர்மானித்தல்
3. அதிதியைத் தீர்மானித்தலும் அழைக்கவிருக்கும் பாடசாலைகளைத் தீர்மானித்தலும்
4. அனுசரணையாளர்களையும் தேவையான நிதியையும் தீர்மானித்தல்
5. மண்டபம் ஒதுக்கீடு செய்தல்

ஒழுங்கமைத்தல் –
1. வணிகதின நடவடிக்கைகளை முன்னாயத்தம் செய்தல்.
2. வணிக தினம் தொடர்பான நடவடிக்கைகளை இனம்காணல்
3. குழுக்களுக்கு வேலைகளை ஒதுக்கீடு செய்தல்
4. நிதி, தொடர்பாடல், உபசரணை போன்ற நடவடிக்கைகளைப் பங்கீடு செய்தல்
5. ஒவ்வொரு பிரிவுக்குமான வேலைகளை ஒதுக்குதல்
6. எனைய வளங்களை ஒதுக்குதல்

நெறிப்படுத்தல்
1. நிதி, தொடர்பாடல், உபசரணை போன்ற நடவடிக்கைகளுக்குப் பொறுப்பானவர்களை நியமித்தல்
2. பொதுவான நடவடிக்கை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தல்
3. வணிக தின நிகழ்ச்சியில் பங்கு பற்றச் செய்வதற்காக மாணவர்களை ஊக்கப்படுத்தல்

கட்டுப்படுத்தல்
1. வணிக தின நிகழ்ச்சி நிரல்களுக்கு அமைவாக நடவடிக்கைகள் காணப்படுகின்றதா என உறுதிப்படுத்தல்
2. வணிக தினம் தொடர்பில் பின்னூட்டல்களைப் பெற்றுக் கொள்ளுதல் அதாவது அதிதியை வரவேற்றல், மாணவர்கள், ஏனையவர்கள் தொடர்பாக
3. வணிக தின நிகழ்ச்சிகளை மேடையேற்றல்

(4 × 1/2 = 2 புள்ளிகள்)

(ii) (அ) முகாமையாளர் ஒருவருக்கான எண்ணக்கருவாக்கத் திறனில் உள்ளடங்கும் **நான்கு** ஆற்றல்களைக் குறிப்பிடுக.

1. உள்ளக, வெளியக சூழல்களை இனங்காணல்
2. முழுமையான ஆய்வு செய்யும் திறன்
3. பிரச்சினைகளை இனங்காணல் மற்றும் தீர்வு கூறும் திறன்
4. தூர திருஷ்டி
5. தீர்மானம் எடுக்கும் திறன் / தந்திரோபாய தீர்மானமெடுக்கும் ஆற்றல்.
6. நுணுக்கமாக சிந்திக்கும் ஆற்றல் / புதுமையான சிந்தனை

(4 × 1/2 = 2 புள்ளிகள்)

(ஆ) ஹென்றி மின்ற்ஸ்பேக் என்பவரது முகாமைத்துவ வகிபாகங்களின்படி **தலைவர், முயற்சியாளர்** ஆகிய உப வகிபாகங்கள் கொண்டிருக்கும் கருமங்களை விவரிக்குக.

**தலைவர்**
1. ஊழியர்களை ஈடுபாட்டுடன் ஊக்குவித்தல்
2. ஊழியர்களை மதிப்பிடலும் பாராட்டுதலும்
3. ஊழியர் பதவியுயர்வும் நீக்கமும் 1 புள்ளி

**முயற்சியாளர்**
1. புதிய செயற்திட்டங்களை அறிமுகப் படுத்தல்,
2. உள்ளக சூழலில் மாற்றங்களைக் கொண்டுவருதல்
3. நிறுவனக் கட்டமைப்புக்களை மாற்றுதல் 1 புள்ளி

(iii) வணிக ஆலோசனை வழங்கும் நிறுவனம் ஒன்று உற்பத்திக் கிரயத்தைக் குறைப்பதற்காக சூரிய ஒளி மூலமான புதிய மின்சார முறைமையையும் உற்பத்தித் தன்னியக்க முறைமையையும் உமக்கு பிரேரித்துள்ளது. நீர் இந்த மாற்று வணிகப் பிரேரணைகளில் இருந்து ஏதேனும் ஒன்றைத் தெரிவுசெய்ய வேண்டியுள்ளது. இந்த மாற்றுப் பிரேரணைகளை மதிப்பிடுவதற்குப் பயன்படுத்தக்கூடிய **நான்கு** நியதிகளை விவரிக்குக.

| | | | |
|---|---|---|---|
| 1. | கிரயம் | - | கிரயத்தை ஒப்பிடல் |
| 2. | பொருத்தப்பாடு | - | நோக்கத்துக்கு பொருத்தமான நடைமுறைப் படுத்தக் கூடிய தன்மை |
| 3. | சாத்தியம் | - | உரிய நோக்கத்திற்கு பயன்படுத்தக் கூடிய சாத்தியம் |
| 4. | நிறுவனம் தொடர்பான முக்கியத்துவம் | - | இதில் எது நிறுவனத்திற்கு மிகவும் முக்கியமானது. |
| 5. | சூழலுக்கு நேயமான தன்மை | - | சூழல் தாக்கமற்ற தன்மை |
| 6. | பாவனைக் காலம் | - | எத்தனை வருடம் |
| 7. | தொழிநுட்ப சாத்தியத் தன்மை | - | உதிரிப்பாக கிடைப்பனவுத் தன்மை, திறமையான ஊழியர் கிடைப்பனவு . |
| 8. | ஏற்றுக் கொள்ளக் கூடிய தன்மை | - | நிறுவனத்தின் பல்வேறுபட்ட குழுக்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட தன்மை. |
| 9. | நிலைபேறான தன்மை | - | தெரிவு செய்யப்பட்ட முறைமையிலிருந்து தொடர முடிதல் |

குறிப்பிட 4 x 1/2 =2 புள்ளிகள்
விளக்க 4 x 1/2 =2 புள்ளிகள்

(iv) ஒழுங்கமைத்தலின் படிமுறைகளைப் பெயரிட்டு, அவற்றுள் ஏதாவது **மூன்றைச்** சுருக்கமாக விவரிக்குக.

1. கருமங்களை இனங்காணல்
2. வேலைகளைப் பகிர்தல்
3. திணைக்களப்படுத்தல்
4. அதிகாரங்களையும் பொறுப்புக்களையும் கையளித்தல்
5. வேலை செய்வதற்கான நியமங்களை உருவாக்கல்
6. வளங்களை ஒதுக்கீடு செய்தல்
7. கூட்டிணைத்தல்

ஆகக் குறைந்தது 4 இனைக் குறிப்பிட 1 புள்ளி
மூன்றை விளக்க 3 × 1 = 3 புள்ளிகள்

(v) (அ) தள அமைப்புத் திட்டம் ஏன் தேவையானதாகும் என்பதனை விளக்குக.

1. பொருட்கள், இயந்திரங்கள் என்பனவற்றைப் பயன்படுத்துகின்ற வினைத்திறனை அதிகரிக்க
2. இடவசதிகளின் மூலம் உச்ச பயன்பாட்டினைப் பெற்றுக் கொள்வதற்கு.
3. பொருட்கள் பயன்படுத்தும் கிரயத்தைக் குறைந்துக் கொள்வதற்கு
4. பொருட்களும், ஊழியர்களும் அசையும் போது ஏற்படக் கூடிய தடைகளைக் குறைக்க.
5. விபத்துக்களைக் குறைக்க.
6. தொடர்பாடல் ஒருங்கிணைத்தல், கண்காணிப்பு என்பவற்றை இலகுவாக்க
7. ஊழியர் மனோபலத்தை அதிகரிக்க
8. தொடர்ச்சியாக வேலைகளைச் செய்வதற்கு
9. தேவையற்ற விதத்தில் இழக்கும் நேரத்தைக் குறைத்தல்.
10. நுகர்வோரைக் கவர்வதற்கு (4 × 1/2 = 2 புள்ளிகள்)

(ஆ) தேவையற்ற சரக்கிருப்புகளைப் பேணியதே நட்டங்கள் ஏற்பட்டதற்குக் காரணம் என வணிகமொன்றின் நிதிப் பகுப்பாய்வில் இருந்து அறிய வந்துள்ளது. இவ்வாறான நட்டங்களைக் குறைப்பதற்கு சரக்கிருப்புக் கட்டுப்பாட்டில் பயன்படுத்தக்கூடிய **நான்கு** உத்திகளை விவரிக்குக.

1. இருப்பு மட்டங்களைப் பேணும் தொழில்நுட்பங்கள்
2. ABC பகுப்பாய்வு
3. இரட்டைக் கொள்கலன் முறை
4. கணினிச் செயற்திட்டம்
5. தொடர் இருப்பெடுத்தலை பதிவு செய்யும் முறை
6. JIT முறைகள்
7. MRP (மூலப்பொருள் தேவைப்பாட்டுத் திட்டம்)

4 × 1/2 = 2 புள்ளிகள்
மொத்தம் 4 புள்ளிகள்

**6.** (i) (அ) நிறுவனமொன்றுக்கு உற்பத்தித்திறன் முக்கியத்துவமானதாக அமைவதற்கான **நான்கு** காரணங்கள் தருக.

1. வணிகத்தினது வளங்களைப் பகிர்ந்தளித்தல் தொடர்பான தீர்மானம் எடுப்பதற்கு
2. வணிகத்தை விரிவாக்கம் செய்தல் தொடர்பான தீர்மானம் எடுத்தலுக்கு
3. ஏனைய ஒத்த நிறுவனங்களுடன் வினைத்திறனை ஒப்பீடு செய்வதற்கு
4. வணிக நிறுவனத்தின் முன்னேற்றத்தினை அறிந்து கொள்வதற்கு

(4 × 1/2 = 2 புள்ளிகள்)

(ஆ) நிறுவனமொன்றின் உற்பத்தித்திறனை அதிகரிக்கச் செய்வதற்குப் பயன்படுத்தப்படும் கணினி நுட்பமுறையொன்றான 'கணினி உதவியுடனான வடிவமைப்பு' (CAD) என்பதன் மூலம் கருதப்படுவது யாது என்பதனையும் அதன் **இரண்டு** அனுகூலங்களையும் எழுதுக.

கணினிமென் பொருட்களை பயன்படுத்தி பொருட்களை வடிவமைத்தல் 1 புள்ளி

நன்மைகள்

1. விரயம் குறைவு
2. பொருள் உற்பத்தியில் இரு பரிமாண மற்றும் முப்பரிமாண முறைகளைப் பயன்படுத்தி உற்பத்திப் பொருளை அபிவிருத்தி செய்ய முடியும்
3. பல்வேறு இடங்களில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் குறித்த இடத்தில் இருந்து மாற்றியமைப்பதற்கு / விருத்தி செய்தலுக்கு
4. குறைந்த கிரயத்தில் வடிவமைக்கலாம்
5. இறுதிப் பொருள் உற்பத்திக்கு முன்னர் உற்பத்திப் பொருளில் மாற்றியமைப்புக்களை மேற்கொள்ள முடியும்
6. வடிவ உற்பத்தித்திறனை அதிகரிக்கலாம்
7. வடிவத்தரத்தை அதிகரிக்கலாம்
8. சிறந்த தொடர்பாடலை விருத்தி செய்யலாம்
9. உற்பத்திக்கு தேவையான தரவு முறைகளை உருவாக்கலாம்

(2 × 1/2 = 1 புள்ளி)

(ii) இந்திரன் என்பவர் தனது பிரதேசத்தில் காணப்பட்ட புத்தாண்டுக்கான வியாபாரச் சந்தையில் வியாபாரக் கடை ஒன்றை வாடகைக்குப் பெற்றுக்கொண்டார். இந்திரனின் பொருட்களைப் போன்ற பொருட்கள் விற்பனை செய்த ஏனைய கடைகளிலும் பார்க்க அவரது பொருட்கள் மிக விரைவாக விற்றுத் தீர்ந்தன. இந்திரனின் பொருட்கள் மிக விரைவாக விற்றுத் தீர்ந்ததற்கு ஏதுவான **நான்கு** காரணங்களை விவரிக்குக.

1. நியாயமான விலை காணப்படுதல் - மற்றவர்களின் பொருட்களுடன் ஒப்பிடும் போது
2. தனியாள் விற்பனை தேர்ச்சி - நபரின் கவர்ச்சிகரமான பண்பு / ஊழியர்களின் கவர்ச்சிகரமான பண்பு
3. கவர்ச்சிகரமான முறையில் ஒழுங்கு படுத்தல் - பொருட்களை காட்சியறையில் கவர்ச்சிகரமாக வைத்தல்
4. சிறந்த அமைவிடத்தில் அமைந்திருத்தல் - இலகுவாக அடையக் கூடியதாக இருத்தல்
5. விற்பனை - மேம்படுத்தல் முறைகள்
6. பொருளின் தரம் - தரத்தை மேம்படுத்தல்.

(4 × 1 = 4 புள்ளிகள்)

(iii) (அ) உற்பத்தியாளர் ஒருவர் தனது உற்பத்திப்பொருட்களைப் பொதிசெய்வதில் தயக்கம் காட்டினார் உற்பத்தியாளர் ஒருவர் தனது உற்பத்திப்பொருட்களைச் சந்தைக்குப் பொதிசெய்து வழங்குவதை ஊக்கப்படுத்துவதற்காக முன்வைக்கக்கூடிய **நான்கு** விடயங்களைத் தருக.

1. பொதி செய்யப்பட்ட பொருளில் நுகர்வோர் விருப்பம் காட்டல் / கவர்ச்சித் தன்மை உயர்வடைதல்
2. வியாபாரத்தின் பிரதிமை உயர்வடைதல்
3. பொருட்களுக்கு பாதுகாப்பு காணப்படல்
4. தகவல்களை பெற்றுக் கொள்ளமுடியும்
5. இலகுவாக மேம்படுத்தல் செய்யலாம்
6. பொருட்களை காட்சிப்படுத்தல் இலகுவாதல்
7. களஞ்சியப்படுத்தல் மற்றும் போக்குவரத்துக்கு கையாள்வது இலகு
8. சுயாதீன தெரிவு முறைக்கு இலகுவாக அமையும்

(4 × 1/2 = 2 புள்ளிகள்)

(ஆ) பொருட்கள் சேவைகளுக்கான விலையிடலின் **நான்கு** நோக்கங்களைத் தருக.

1. சந்தையில் நிலைத்திருப்பதற்கு
2. நிகழ்கால இலாபத்தினை உச்சப்படுத்த
3. சந்தைப்பங்கை உச்சப்படுத்த
4. சந்தைப் பங்கை உறிஞ்சிக் கொள்வதை உச்சப்படுத்த
5. உற்பத்திப் பொருள் தரத் தலைமைத்துவத்தினைப் பேண

(4 × 1/2 = 2 புள்ளிகள்)
மொத்தம் 4 புள்ளிகள்

(iv) பல்வேறு நோக்கங்களுக்காக வணிகங்கள் விளம்பரப்படுத்தலைப் பயன்படுத்துகின்றன. விளம்பரப்படுத்தலின் **நான்கு** நோக்கங்களை விளக்குக.

1. தகவல்களை வழங்க - உற்பத்திப் பொருள் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தல்
2. மீள வலியுறுத்த - பொருத்தமான தன்மையை மீள வலியுறுத்தல்
3. தூண்டுதல் அளிக்க - வாங்கத்தூண்டுதல்
4. ஞாபகப் படுத்த - நுகர்வோருககுப் பொருட்களை வாங்க ஞாபகப் படுத்தல்

குறிப்பிட 4 × 1/2 = 2 புள்ளிகள்
விளக்க 4 × 1/2 = 2 புள்ளிகள்

(v) (அ) தனம் என்பவர் நடாத்திவரும் கைத்தறி ஆடைத் தொழிற்சாலை வணிகம் பெரியளவில் வெற்றியடையவில்லை. எனவே அவர் ஹோட்டல் வணிகத்தை ஆரம்பிக்க எதிர்பார்க்கின்றார். இந்நோக்கத்திற்காக அவர் நிதியைப் பெற்றுக்கொள்ளக்கூடிய **நான்கு** வழிகளைக் குறிப்பிடுக.

1. தனிப்பட்ட சேமிப்பு
2. வங்கிக் கடன் பெறல்
3. சொத்து விற்பனை செய்தல்
4. தனிப்பட்ட கடன் பெறல்
5. பங்காளர்களைச் சேர்த்துக் கொள்ளல்
6. குத்தகை
7. வாடகைக் கொள்வனவு

(4 × 1/2 = 2 புள்ளிகள்)

(ஆ) நஸ்மியா வணிகத்தின் விரைவு விகிதம் 2:1 ஆகும். இந்நிலைமையில் தாக்கம் செலுத்திய **நான்கு** காரணங்களைத் தருக.

1. கடன்பட்டவர் அதிகரித்தல்
2. கையிலுள்ள காசு அதிகரித்தல்
3. வங்கி மீதி அதிகரித்தல்
4. பெற வேண்டிய வருமானம் அதிகரித்தல்
5. கடன் கொடுத்தோர் குறைவடைதல்
6. நடைமுறைப்பொறுப்பு குறைதல்.

(4 × 1/2 = 2 புள்ளிகள்)

(மொத்தம் 4 புள்ளிகள்)

7. (i) (அ) வணிகமொன்று தொழிற்படு மூலதனத்தைத் திரட்டக்கூடிய **நான்கு** வழிகளைக் குறிப்பிடுக.

1. வங்கி மேலதிகப் பற்று
2. வணிகத்தாள்
3. நிலுவை செலவீனங்கள்
4. குறுங்கால வங்கிக் கடன்
5. வியாபரக் கடன்
6. வரி ஏற்பாடு
7. பங்கு இலாப சென்மதி

(4 × 1/2 = 2 புள்ளிகள்)

(ஆ) கொழும்பு பங்குப் பரிமாற்று நிலையத்தின் மூலம் பட்டியற்படுத்திய கம்பனி ஒன்று பெற்றுக்கொள்ளக்கூடிய **நான்கு** அனுகூலங்களை விவரிக்குக.

1. நிறுவனத்தின் பிரதிமை அதிகரித்தல்
2. நிறுவனத்தின் பங்குகளுக்குச் சிறந்த பெறுமதியைப் பெற்றுக் கொள்ளலாம்
3. பங்குகளுக்கான இரண்டாம் நிலை சந்தை உருவாகும்
4. முதலிட்டாளர்களைக் கவர்வதற்கான உத்திகளாக அமையும்
5. மூலதன கட்டமைப்பினை உச்ச அளவில் பெற்றுக்கொள்ளலாம்
6. கம்பனிமீதான நம்பகத்தன்மை அதிகரிக்கும்

(4 × 1/2 = 2 புள்ளிகள்)

(மொத்தப் 4 புள்ளிகள்)

(ii) நீர் மனித வள முகாமையாளராகக் கடமையாற்றும் நிறுவனத்துக்கான விற்பனை உதவியாளரை ஆட்சேர்ப்பு செய்வதற்காகத் தயாரிக்கப்படும் விண்ணப்பத்தில் உள்ளடக்க வேண்டிய **நான்கு** வகையான தகவல்களை விவரிக்குக.

1. தனிப்பட்ட விபரங்கள் - பெயர், பிறந்த திகதி, முகவரி போன்றவை
2. கல்வித் தகைமை - க.பொ.த(சா.த), க.பொ.த(உ.த), இளமாணி, முதுமாணி
3. தொழில் தகைமைகள் - ஏனைய தொழில்சார் தகைமைகள்
4. அனுபவம் - வேலை செய்த காலம் தொடர்பாக / கடந்தகால வேலை தொடர்பான தகவல் (work histroy)
5. உறவுகள் அற்ற ஒருவரின் குறிப்பு (Referees) - மத்தியஸ்தர்கள்
6. ஏனைய விசேட ஆற்றல்கள்

(குறிப்பிட4x 1/2 2 புள்ளிகள்)
(விளக்க 4x1/2 = 2 புள்ளிகள்)
(மொத்தம் 4 புள்ளிகள்)

(iii) (அ) வேலையொன்றுக்கு விண்ணப்பித்தவர்களிலிருந்து ஒருவரைத் தெரிவுசெய்வதற்காக, நேர்முகப் பரீட்சைகளுக்கு மேலதிகமாக பல்வேறு வகையான பரீட்சைகளும் நடாத்தப்படுகின்றன. அவ்வாறான **இரண்டு** வகையான பரீட்சைகளை விவரிக்குக.

1. பின்புல ஆய்வு
2. மருத்துவப் பரீட்சை
3. உளச்சார்ப்பு பரீட்சை
4. செய்முறைப் பரீட்சை
5. ஆளுமைப் பரீட்சை

(குறிப்பிட 2 x 1/2 = 1 புள்ளி)
(விளக்க 2 x 1/2 = 1 புள்ளி)

(ஆ) நியமனக் கடிதம் ஒன்றில் உள்ளடங்கும் தகவல்களை வகைப்படுத்தத்தக்க **நான்கு** முறைகளை எழுதுக.

1. வேலை தொடர்பான நியமங்கள் / சட்டதிட்டங்கள்
2. வேலை தொடர்பான நிபந்தனைகள்
3. வேலை தொடர்பான கருமங்கள்
4. கடமைகள் பொறுப்புக்கள்

(4x 1/2 = 2 புள்ளி)

(iv) நட்டத்தை எதிர்நோக்கும் நிறுவனமொன்று தனது வேலைப்படையைக் குறைக்கத் தீர்மானித்துள்ளது. வேலைப்படையைக் குறைப்பதற்குப் பயன்படுத்தக்கூடிய **நான்கு** முறைகளைச் சுருக்கமாக விவரிக்குக.

1. தானாக வேலையில் இருந்து விலகுதல்
2. முன்னரே வேலையிலிருந்து ஓய்வு பெறுதல்
3. வெளிமூலங்களுக்கும் / வெளிமூலங்களாகவும் பயன்படுத்துதல்
4. வேலையை முடிவுறுத்தல்
5. வேறு துறையில் பயிற்சி வழங்குதல்.

4 குறிப்பிட்டு விளக்க 4 புள்ளிகள்

(v) நிறுவனமொன்றின் வியாபாரக் கணக்கில் இருந்து பிரித்தெடுத்த சில தரவுகள் வருமாறு:

| | ரூ. | ரூ. |
|---|---|---|
| விற்பனைகள் | | 500 000 |
| ஆரம்ப இருப்பு | 80 000 | |
| கொள்வனவுகள் | 300 000 | |
| | 380 000 | |
| இறுதி இருப்பு | (120 000) | 260 000 |

மேலே தரப்பட்ட தரவினைப் பயன்படுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய **நான்கு** தகவல்களை எழுதுக.

1. விற்பனைக் கிரயம் அறியலாம்
2 மொத்த இலாபம் அறியலாம்
3 மொத்த இலாப வீதம் அறியலாம்
4 இருப்புப் புரள்வு வீதம் அறியலாம்
5 இருப்புப் புரள்வுக் காலம் அறியலாம்

(4 x 1 = 4 புள்ளிகள்)

8. (i) (அ) தகவல் முகாமைத்துவ தொழில்நுட்பம் என்பதனால் கருதப்படுவது யாது என்பதனை விவரிக்குக.

நிறுவனமொன்றிடம் காணப்படும் கணணித் தொழிநுட்பம் தொடர்பாடல் தொழில் நுட்பம் என்பனவற்றைச் சிறப்பாகப் பயன்படுத்தி தகவல் வளங்களை வினைத்திறனுடனும், பயனுறுதியுடனும் பயன்படுத்தும் செயல் முறையாகும்.

(2 புள்ளிகள்)

(ஆ) தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலம் நிறுவனமொன்று பெற்றுக்கொள்ளக்கூடிய **நான்கு** அனுகூலங்களை விவரிக்குக.

1. மிகச் சரியான தீர்மானத்தை இலகுவாக எடுக்கலாம்
2. செயற்றிறனில் ஏற்படும் தவறுகளைக் குறைக்கலாம்
3. அடைய வேண்டிய வேலையை வினைத்திறனாக நிறைவேற்றலாம்
4. பயனுறுதியாக நிறைவேற்றலாம்
5. வெளியீடுகளின் தரம் உயர்வடையும்
6. தகவல் சேகரிக்க அதிக இடம் கிடைத்தல்
7. செயன்முறைக் கிரயம் குறைவடைதல்
8. போட்டிக்கு முகம்கொடுக்க முடியும்
9. தொடர்பாடல் செயன்முறையை இலகுவாக உருவாக்கலாம்
10. நுகர்வோரையும் ஏனைய சேவை வழங்குனர்களையும் பெற்றுக் கொள்ளலாம்
11. சர்வதேச ரீதியில் வியாபாரம் விரிவடையும்

(4 x 1/2 = 2 புள்ளிகள்)
(மொத்தம் 4 புள்ளிகள்)

(ii) (அ) வணிகர் ஒருவர் தனது வணிக நடவடிக்கைகளுக்கு இணையத்தைப் பயன்படுத்த எண்ணியுள்ளார். இணையத்தைப் பயன்படுத்துவதன் மூலம் அவரது நிறுவன் நடவடிக்கைகளை இலகுவாக்கிக்கொள்ளக்கூடிய **நான்கு** வழிகளை விவரிக்குக.

1. உற்பத்திப் பொருள் மேம்படுத்தலுக்கு இலகு
2. ஊழியர்களைக் கவர முடியும்
3. புதிய சந்தைகளை இனம்காண முடியும்
4. தகவல்களை சேகரிக்க முடியும்
5. தொடர்பாடலை இலகுவாக செய்யலாம்
6. வெளிமூலங்களைப் பயன்படுத்தல்
7. இலகுவாகக் கண்காணிக்க முடியும்
8. GPS இலகுவாகப் பயன்படுத்தலாம்
9. நடமாடும் வேலைப்படையை உருவாக்கலாம்
10. கிரயத்தினைக் குறைக்க முடியும்
11. காகிதாதிகள் பாவனையைக் குறைக்க முடியும்
12. இலத்திரனியல் தபாலினை பயன்படுத்தலாம்

(4 x 1/2 = 2 புள்ளிகள்)

(ஆ) முகில் தொழில்நுட்பத்தைப் (Cloud Technology) பயன்படுத்துவதன் மூலம் நிறுவனமொன்று பெற்றுக்கொள்ளக்கூடிய **இரண்டு** அனுகூலங்களைக் குறிப்பிடுக. )

1. எந்த நேரத்திலும் எந்த இடத்திலிருந்தும் ஆவணங்களுக்குத் தேவையான தகவல்களைப் பெறலாம்
2. சேவையகமும் (Server) கணணி முறைமையும் அவசியமில்லை
3. தரவுத் தளத்தை நடத்துவதற்கான செலவு குறைவு, மின்சாரமின்மை போன்ற காரணங்களால் தகவல்களுக்கு பாதிப்பில்லை
4. தரவுகளைப் பாதுகாக்கலாம்
5. தேவையானளவு தரவைப் பெறலாம்.
6. பாதுகாப்பானது.

(4 x 1/2 = 2 புள்ளிகள்)

(iii) வணிகத் திட்டத்தின் சந்தைப்படுத்தல் திட்டத்தில் உள்ளடக்க வேண்டிய பிரதான தந்திரோபாயங்கள் எவை?

1. உற்பத்திப் பொருள் உபாய வழிமுறைகள்
2. விலை உபாய வழிமுறைகள்
3. விநியோக உபாய வழிமுறைகள்
4. மேம்படுத்தல் உபாய வழிமுறைகள்

(குறிப்பிட 4 புள்ளிகள்)

(iv) காசுப் பாய்ச்சல் கூற்றைத் தயாரிப்பதன் முக்கியத்துவத்தை விளக்குவதற்கான **இரண்டு** காரணிகளைக் குறிப்பிடுவதுடன் வணிகமொன்றின் காசு வெளிப்பாய்ச்சலுக்குப் பொருத்தமான **மூன்று** உருப்படிகளையும் தருக. )

**காரணிகள்**

1. குறிப்பிட்ட காலத்திற்கான காசு உட்பாய்ச்சல் வெளிப்பாச்சல் என்பவற்றினை எதிர்வு கூற முடியும்.
2. காலப்பகுதியின் முடிவில் காணப்படக் கூடிய காசு மீதியை எதிர்வு கூறலாம்

3. குறித்த காலப்பகுதிக்கான காசு உட்பாய்ச்சல், வெளிப்பாய்ச்சல் போக்குகளை முன்கூட்டியே அறியலாம்
4. நிதியைப் பெற்றுக் கொண்ட வழிமுறைகளும் நிதியைப் பயன்படுத்தியவழிமுறைகளையும் முன் கூட்டியே அறியலாம்.

**உருப்படிகள்**

1. காணி கட்டடம் கொள்வனவு செய்தல்
2. இயந்திர உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்
3. மூலப் பொருட்களை கொள்வனவு செய்தல்
4. விற்பனைக் கிரயம்
5. நிர்வாகக் கிரயம்
6. கடன் தவணைக் கட்டணக் கொடுப்பனவு
7. செலுத்திய வருமான வரி
8. செலுத்திய கடன் வட்டி

(2 காரணிகள் குறிப்பிட 2 × 1 1/2 = 3 புள்ளிகள்)
(3 உருப்படிகள் குறிப்பிட 1புள்ளி)
(2 அல்லது 1 குறிப்பிட 1/2 புள்ளி)
(மொத்தம் 4 புள்ளிகள்)

(v) சாமந்தி என்பவர் தனது தற்போதைய வணிகத்துக்கு மேலதிகமாக கால்நடை பண்ணையொன்றையும் ஆரம்பிக்க எதிர்பார்க்கின்றார். இந்நோக்கத்திற்காக செயற்றிட்ட அறிக்கையொன்றைத் தயாரிக்குமாறு நீர் கேட்கப்பட்டுள்ளீர். இச்செயற்றிட்ட அறிக்கையின் சுருக்கத்தில் நீர் உள்ளடக்கும் காரணிகளைக் குறிப்பிடுக.

1. மதிப்பிடப்பட்ட செயற்திட்டக் கிரயம்
2. மதிப்பிடப்பட்ட வருமானக் கூற்று
3. காசுப் பாச்சற் கூற்று
4. கடனை மீளச் செலுத்தும் அட்டவணை
5 மதிப்பிடப்பட்ட ஐந்தொகை
6. செயற்றிட்ட நிறைவேற்றுச் சுருக்கம்
7. சந்தை பற்றிய விடயம்.

(4 குறிப்பிட 4 புள்ளிகள்)